களத்தில்

12-07-2001 (238)

தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கிவரும் செய்திக்தாள்

உள்ளே...

03 சமாதான முயற்சிகள் நிரந்தரமாக பாதிப்புறும்

நீதிக்கு எல்லை கிடையாது 05

09 21ஆம் நூற்றாண்டின் யுத்தகளம்...

அக்கினிக்குஞ்சுகளுக்கு மலர்மாலை சாற்றும் சூரியத்தேவன்

தடைகளைத் தகர்த்து போராட்டத்தை முன்னோக்கி நகர்த்தியோர் கரும்புலிகள்

தேசத்தின் எழுச்சி நாளில் தேசியத் தலைவர்

வன்னியில், சிறப்பாக ஒழுங்கு செய்யப்பட்ட இடம் ஒன்றில், பலநூற்றுக்கணக்கான தரை, கடற் கரும்புலி வீரர்கள், பல தளபதிகள் போராளிகளுடன், தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள், கரும்புலி வீரர்களுக்கு வீரவணக்கம் செலுத்தும் நிகழ்வில் கலந்துகொண்டார். முதற்கரும்புலியாகி தன்னை தற்கொடை செய்துகொண்ட கப்டன் மில்லர் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட பிற்பகல் 7.03 மணிக்கு பொது சுகச்சுடரை ஏற்றி, கரும்புலி வீரர்களின் திருவுருவப் படங்களுக்கு மலர்மாலை அணிவித்து வீரவணக்கம் செலுத்தினார் தேசியத் தலைவர் அவர்கள்.

05.07.2001 அன்று, கரும்புலிகள் நாளை முன்னிட்டு, வன்னியில் உணர்வெழுச்சியுடன் மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வில் கலந்துகொண்டு, கரும்புலிவீரர்களின் ஒப்பிடமுடியாத ஈகத்தை, அதன் சிறப்பை, விடுதலைப் போராட்டத்தில் அவர்களின் அற்புதமான ஈகம் ஏற்படுத்திச் சென்ற வியத்தகு மாற்றங்கள் என்பனவற்றை தலைவர் அவர்கள், அங்கு திரண்டிருந்த, கரும்புலிவீரர்கள், தளபதிகள், போராளிகளுக்கு எடுத்துரைத்தார்.

'இன்று நாம் கொண்டாடுவது துக்கதினமல்ல. ஒவ்வொரு தமிழனும் பெருமைப்படவேண்டிய பெருமைக்குரிய நாள். உலகத்திற்கே தமிழர்கள் யார் என்பதை அறியவைத்த நாள். இவ்வளவு காலமும் தமிழர்கள் சிங்களவர்களைப் பொறுத்து கள்ளத்தோணிகள் என்றும், உலகத்தவர்களைப் பொறுத்து வெறும் கூலித் தொழிலாளர்கள் என்ற பெயருடனும் வாழ்ந்த நிலை மறைந்து, தற்போது தமிழர்கள் என்றால் ஒரு வீரம் மிக்க இனம் என்பதை உணரவைத்த நாள் கரும்புலிகள் நாளாகும்.

விடுதலைப் போராட்டத்தில் சிக நெருக்கடியான காலகட்டங்களில், இக்கட்டான சூழ்நிலைகளில் எழுந்த தடைகளைத் தகர்த்து விடுதலைப் போராட்டத்தை அடுத்த கட்டத்திற்கு நகர்த்தியவர்கள் கரும்புலிகளே.

எமது விடுதலைக்கான தாகம் தூண்டலாக, பலமான சக்தியாகவே கரும்புலிகள் இயங்கிவந்தனர். இன்றுள்ள காலத்திலும் எழுபோகின்ற தடைகளைத் தகர்த்து விடுதலையை வென்றெடுக்கும் பலம் பொருந்திய போராட்ட சக்தியாக கரும்புலிகள் அணியினரே உள்ளனர்'

இவ்வாறு, தேசத்தின் எழுச்சிநாள் நிகழ்வில் கலந்துகொண்டு கரும்புலிகள், தளபதிகள் போராளிகள் மத்தியில் உரை யாற்றிய தேசியத் தலைவர் அவர்கள் குறித்துரைத்தார்.

கரும்புலிகள் நாள் நிகழ்வுகள், விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள தமிழீழப் பகுதிகள் மாவீரர் மிகச் சிறப்பாக நடைபெற்றன.

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

அதனது காலத்தில் சமாதானத்திற்கு சாத்தியமே இல்லை

நிரூபிக்கும் சந்திரிகா அரசு

1998ம் ஆண்டு தை மாதம், சிறீலங்கா சனாதிபதி சந்திரிகாவால், விடுதலைப் புலிகள் இயக்கம் தடைசெய்யப்பட்ட இயக்கமாக அறிவிக்கப்பட்டது. அன்று அவர் விடுதலைப் புலிகளைத் தடைசெய்யப்பட்ட இயக்கமாக அறிவித்ததானது, இன்று நோர்வேயின் சமாதான முயற்சிக்கு பெரும் தடங்கலாக அமைந்திருக்கின்றது. உண்மையானதும் நேர்மையானதுமான சமாதானப் பேச்சுவார்த்தையை மேற்கொள்வதாயின், விடுதலைப் புலிகள் மீதான தடையை, பயங்கரவாத முத்திரையை அகற்றிவிட்டு, பரஸ்பர நம்பிக்கையை ஏற்படுத்தும் காரியங்களை இருதரப்பும் மேற்கொண்டபடி, சமத்துவமான நிலையில் இருந்தபடி இருதரப்பும் பேசுவதன்பதே யதார்த்தமாக இருக்கமுடியும்.

நிரந்தரப் போர்நிறுத்தம் ஒன்றுக்கு சம்மதிக்க மறுக்கும் சந்திரிகா அரசு, விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்குவதென்பது தற்போதைய நிலையில் தன்னுடைய நெருக்கடி மிக்கதாக அமைந்துவிடும் எனவும் தெரிவித்துவந்திருக்கின்றது.

விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கம் தொடர்பாக சந்திரிகா அரசு கொண்டுள்ள உண்மையான நிலைப்பாடு, அது எதிர்கொண்டுள்ள தற்போதைய அரசியல் நெருக்கடிகள் அது நடந்துகொண்ட முறையில் நன்கு வெளிப்பட்டிருக்கின்றது.

கடந்தமாத இறுதியில், அரசுக்கெதிராக எதிர்க்கட்சிகள் கொண்டுவந்துள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை, அரசை ஆட்டம்காண வைத்துள்ளது என்பது சொல்லித் தெரியவேண்டியதில்லை. அரச பாராளுமன்றத்தில் திக்குமுக்காடுகின்றது. அரசைக் காப்பாற்றும் முயற்சியில் அது பலதரப்பட்ட தனக்கே உரித்தான வழிவகைகளில் முயற்சிகளை மேற்கொண்டுவருகின்றது.

இம்மாதம் 6ம் திகதி பாராளுமன்ற அங்கீகாரத்தைப் பெறவேண்டிய அவசரகாலச்சட்டத்தை, பாராளுமன்றத்தில் போதிய ஆதரவைப் பெறமுடியாது எனக்கண்டு கொண்ட சந்திரிகா அரசு அதனைத் தற்காலிகமாகக் கைவிட்டுள்ளது.

இச்சட்டம் காலாவதியாகும்போது, அவசரகாலச் சட்ட விதிகளின் பிரகாரம் நடைமுறைப்படுத்தப்படுகின்ற விடுதலைப் புலிகள் மீதான தடை உட்பட, தமிழ்மக்களுக்கு எதிரான பல உத்தரவுகள் செயலிழந்துவிடும் என்பதுடன் அவற்றை படையினரால் செயற்படுத்த முடியாமல் போய்விடும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

அரசுக்கு எதிராக திரண்டுவரும் எதிர்க்கட்சியினருக்கு எதிராக பிரச்சாரம் செய்வதற்கும் சிறீலங்கா அரசு இதனையே கூறிவந்தது. இதன்மூலம், அவசரகாலச் சட்டத்திற்கு ஆதரவாக பாராளுமன்றத்தில் அங்கீகாரத்தைப் பெற்று, அதனை தனது அரசு மீதான பாராளுமன்றப் பலமாக காட்ட சந்திரிகா அரசு முயற்சித்தது. ஆனால் சந்திரிகா அரசின் திட்டம் தோல்வியில் முடிவடைந்தது. அவசரகாலச் சட்டத்தை பாராளுமன்ற அங்கீகாரத்திற்குக் கொண்டுவரத் தயங்கிய அரசு, அதனை இறுதியில் கைவிட்டுள்ளது.

ஆனால், விடுதலைப் புலிகள் இயக்கம் அவசரகாலச் சட்டத்தின்கீழ் தடை செய்யப்பட்டிருந்தபோதும், அச்சட்டம் காலாவதியாகியிருக்கும் நிலையில், பயங்கரவாதத் தடைச்சட்ட விதிகளின் கீழ் சந்திரிகா அரசால் மீண்டும் தடைசெய்யப்பட்டிருக்கின்றது.

இராணுவத்தினருக்கும், பொலிஸாருக்கும் அவசரகாலச் சட்டவிதிகளின்கீழ் வழங்கப்பட்டிருக்கும் அதிகாரங்கள் மீளவும் வழங்கப்பட்டிருக்கின்றன.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் விடுதலைப் புலிகள் இயக்கம் தடைசெய்யப்பட்டிருக்கின்றது என சந்திரிகா அரசு அறிவித்துக்கொண்டுள்ளபோதும், இதிலுள்ள சட்டப்பிரச்சினைகளை தமிழ்க்கட்சிகளும், எதிர்க்கட்சியினரும் முன்வைக்கின்றனர்.

1978ம் ஆண்டு, விடுதலைப் புலிகள் இயக்கத்தை பயங்கரவாதச் சட்டத்தின் கீழ் தடைசெய்த முன்னைய ஐக்கிய தேசியக் கட்சி அரசு, பின்னர் 1979இல், அதே பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழுள்ள சட்டவிதிகளின் கீழ் அத்தடையை அகற்றிக் கொண்டதாகவும், தெரிவிக்கும் சட்டவல்லுனர்களும் எதிர்க்கட்சி அரசியல்வாதிகளும், அதே சட்டத்தின்கீழ் மீண்டும் தடைசெய்வது சட்டத்திற்கு முரணானது என வாதிடுகின்றனர்.

இங்கு தடை செய்யப்பட்டது சரியா தவறா என்பது, நம்மைப் பொறுத்தவரை அர்த்தமற்றது.

விடுதலைப் புலிகளை தடை செய்யப்பட்ட இயக்கமாக அறிவித்ததன் பிரகாரம், விடுதலைப் புலிகள் இயக்கத்தினரை அழைத்து விசாரணை நடத்துவது, கட்டங்கள் நடத்துவது, ஒன்றுகூடுவது, ஆதரவும் ஒத்துழைப்பும் நல்குதல் என்பன தடை செய்யப்பட்ட குற்றங்களாகும். இதன்படி, இக் குற்றங்களை இழைப்போர் எனச் சந்தேகிக்கப்படுவோர் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்படவும், குற்றவாளிகளாக சிக்கினால் படையினரால் சிறீலங்கா நீதிமன்றங்களால் குற்றஞ்சாட்டப்படும் ஒருவர் அதிகபட்சம் பதினைந்து ஆண்டுகள் வரை சிறையில் அடைக்கப்படவும் அதிகாரம் இருக்கின்றது.

இங்கு சிங்களத்தின் தடைச்சட்டங்கள் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தைத் தீர்மானிப்பதில்லை என்பதுவே யதார்த்தம். விடுதலைப் புலிகள் மீதான தடை வருவதற்கு முன்னராக தமிழ்மக்கள் நியாயமான முறையில் நடத்தப்பட்டார்கள் என்று அர்த்தம்கொள்ள வாய்ப்பே இல்லை. தமிழ்மக்களின் நியாயபூர்வமான அரசியல் நிலைப்பாட்டை, அபிலாசைகளை அமைதியான முறையில் வெளிப்படுத்துவதையே, இரும்புக்கரங்கள் கொண்டு நசுக்கிய சிங்கள அரசுகள், தமிழ்மக்களின் ஆயுதம் தாங்கிய விடுதலைப் போராட்டத்திற்கு வழிவிடும் என்பது அர்த்தமற்ற கருத்து. ஆக, விடுதலைப் புலிகள் இயக்கம் மீதான தடையை சந்திரிகா அரசு விலக்கிக்கொண்டால், ஏதோ விடுதலைப் போராட்டத்திற்கு இதுவரை இருந்துவந்துள்ள தடைகள், கஸ்டங்கள், சிக்கல் சிரமங்கள் நீங்கிவிடும் என அர்த்தமாகாது. அப்படியாக மனப்பால் குடிக்கவும் தமிழர்கள் தயாராக இல்லை.

சிங்களப்படையினரின் காட்டுமிராண்டித்தனமான செயற்பாடுகளுக்கே சிங்களத்தின் கொடிய சட்டங்கள் துணைபோகின்றன. தமிழின அடக்குமுறையையும், இன அழிப்பையும் நியாயப்படுத்தி, படையினரின் பயங்கரவாதச் செயல்களுக்கு இச்சட்டங்கள் சட்ட அங்கீகாரம் வழிக்கின்றன என்பதுவே உண்மை.

சிங்களம் தனது அடக்குமுறையை தீவிரப்படுத்தப்படுத்த தமிழீழ விடுதலைப் போராட்டமும் வீரம் மூச்சும் பெறும் என்பதுவே நம் கண்முன்னால் நிகழ்ந்துவரும் உண்மைகள்.

இங்கு நமது அவதானத்திற்குரியது என்னவென்றால், காலாவதியாகிவிட்ட அவசரகாலச்சட்டத்தின்படி விடுதலைப் புலிகள் மீதான தடையும் செயலிழந்துள்ள நிலையில், சந்திரிகா அரசு அவசரஅவசரமாக மேற்கொண்டுள்ள மாற்று நடவடிக்கைகளாகன். சட்டச்சிக்கலுக்கும், விமர்சனங்களுக்கும் உள்ளாகும் எனத் தெரிந்திருந்தும், இம்மாற்று வழியைக் கைக்கொண்டு விடுதலைப் புலிகள் இயக்கத்தை தடை செய்வதாக சிறிலங்கா அரசு அறிவித்திருப்பது தற்போதைய அழிநிலையில் முக்கியமான விடயம்.

சிறிலங்கா அரசின் இந்தப் பிடிவாதப்போக்கு, அதன் சமாதான ஆர்வம் பற்றிய முகமூடியைக் கிழித்திருக்கின்றது. சந்திக்கும் அரசியல் நெருக்கடியில், இலங்கையே இல்லாதுபோகின்ற விடுதலைப் புலிகள் மீதான தடையை வலிந்து மீண்டும் நிலைநாட்ட நினைத்துச் செயற்படுவது, சந்திரிகா அரசின் சமாதானத்திற்கு எதிரான போக்கையே பகிரங்கப்படுத்துகின்றது.

ஏப்பிரலில் ஆனையிறவைக் கைப்பற்றும் நோக்குடன் சந்திரிகா அரசு நடத்திய அக்கினிச்சுவாலை இராணுவ நடவடிக்கையும், அண்மையில், சிங்களப் படையினர் மேற்கொண்ட கடுமையான குண்டுவீச்சுத் தாக்குதல்களும் அதனையே மெய்ப்பிக்கின்றன.

தான் சந்தித்துள்ள பெரும் அரசியல் நெருக்கடியில் இருந்து தப்பித்துக்கொள்ள, போனவாதிகளின் ஆதரவைப் பெற இந்த நகர்வை அரசு மேற்கொண்டது எனச் சொல்லிக்கொள்ளின், சந்திரிகா அரசுக்கு போனவாதிகளின் ஆதரவு என்றும் தேவையாகவே இருக்கும். அப்படியானால் சமாதானத்துக்கு விரோதமான காரியங்களையே அது தொடர்ந்து மேற்கொள்ளும் என்பது தெளிவானது. ●

நுணுக்குக் காட்டி

இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாக சர்வதேச நிலைப்பாட்டை அரசாங்கம் தெரிந்துகொண்டிருந்தால் சமாதானத் தூதுவர் எரிக் சொல்கைமின் செயற்பாட்டை புரிந்துகொள்வது அரசுக்கு சிரமமாக இருந்திருக்காது. இதிலிருந்து, பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க அரசாங்கம் தயாரில்லை என்பது தெட்டத் தெளிவாகின்றது.

—ஐக்கிய இடதுசாரி முன்னணியின் தலைவர் வாசுதேவ நாணயக்கார
தினக்குரலில் (08.10.2001)

ஃ ஃ ஃ

சிறீலங்கா அரசும், அமெரிக்க அரசும் பரஸ்பரம் கருத்தை மதித்து வந்துள்ளன என்பதுடன், தேவைப்பட்ட வேளைகளில் உதவிகளையும் வழங்கியுள்ளன. சுதந்திரத்திற்குப் பின் சிறிலங்காவிற்கு 16மில்லியன் டாலர்களுக்கு மேல் நிதியுதவியை அமெரிக்கா வழங்கியுள்ளது. வியற்நாம் யுத்தத்தின்போது அமெரிக்க விமானங்கள் தங்கிச் செல்ல சிறிலங்கா அனுமதித்திருக்கின்றது. ஜே.வி.பி.யினரின் கிளர்ச்சியின்போது சிறிமாவோ அரசிற்கு யுத்ததளபாடங்களை அமெரிக்கா வழங்கியிருக்கின்றது.

இதன்தொடர்ச்சியாகவே விடுதலைப் புலிகளைப் பயங்கரவாத அமைப்புகளின் பட்டியலில் சேர்த்தமையையும், தடைசெய்தமையையும் கருதவேண்டும்.

—சிறிலங்காவிற்கான அமெரிக்கத் தூதுவர் ஆஸ்லி வில்ஸ (03.07.2001 அன்று கொழும்பில் நடந்த கூட்டமொன்றில்)

ஃ ஃ ஃ

கடுப்புப் பொலிஸாரால் சித்திரவதை செய்யப்பட்ட இளைஞர்களைச் சந்தித்தேன். மாடு மலத்தை நக்குமாறு அவர்கள் பணிக்கப்பட்டிருந்தனர். ஒருவரின் வாயில் கரும்பு ஊற்றப்பட்ட காயம் இருந்தது. ஒருவரின் கையிரண்டையும் எட்டு வழங்காமலே போய்விட்டது. வைத்திய அறிக்கைகளைப் பெற்று இப்படியான சித்திரவதைகளைப் புரிந்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும். நடைமுறையில் அப்படி நடக்கின்றதா என்று கேட்டால், எனக்குத் தெரிந்தவரை இதுவரை இல்லை என்றே கூறுவேன்.

— மனித உரிமை ஆணைக்குழு சுதர்சனி பிரேமதாஸ
பி.பி.சி தமிழோசையில் (03.07.2001)

ஃ ஃ ஃ

சிறீலங்காவில் இல்ரேலிய தூதுவர் இயங்குவதை முன்னிட்டு மக்கள் ஒட்டு மொத்தமாக எதிர்ப்புத் தெரிவிக்கும் நாட்டில் இடம்பெறும் யுத்தத்தை நிறுத்தி சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்க ஆயுத விநியோகியான இஸ்ரேல் இலங்கையை அனுமதிக்காது. இஸ்ரேல் தூதுவரை இலங்கையில் இயங்க அனுமதித்ததில் இருந்து, போரை முன்னெடுத்துச் செல்லவே சந்திரிகா அரசு பிரியப்படுகின்றது என்பது நன்கு வெளிப்படுகின்றது.

— நீண்ட காலத்தின் பின் கடந்த வாரம் இலங்கைக்கான இஸ்ரேல் தூதுவர் பொறுப்பேற்றிருப்பது குறித்து முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம்

ஃ ஃ ஃ

சமாதான முயற்சிகள் நிரந்தரமாக பாதிப்புறும்

சிறீலங்கா அரசிற்கு விடுதலைப் புலிகள் எச்சரிக்கை

யாழ்ப்பாணத்திலும் பூநகரியிலும் விடுதலைப் புலிகளின் நிலைகள் மீது சிறீலங்கா அரசாங்கம் விமான, பீரங்கித் தாக்குதல்களைத் தீவிரப்படுத்தியிருப்பது சமாதான முயற்சிகளை நிரந்தரமாகப் பாதித்துவிடும் என தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் எச்சரித்துள்ளது. 2.7.01 அன்று வன்னியிலுள்ள புலிகளின் தலைமைச் செயலகத்திலிருந்து வெளியாகியுள்ள அதிகாரபூர்வமான அறிக்கையில் இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

யூன் 30/ யூலை முதலாம் திகதிகளில் நடைபெற்ற இக்கடுமையான விமானத் தாக்குதல்களை 'ஆத்திர மூட்டும் ஆக்கிரமிப்பு நடவடிக்கை' என்றும் 'திட்டமிடப்பட்ட போர் விரிவாக்கம்' என்றும் விடுதலைப் புலிகள் சாடியுள்ளனர். நம்பிக்கையில்லாத் தீர்மானத்தால் எழுந்த அரசியல் நெருக்கடியைச் சமாளிப்பதற்கு சிங்கள தேசியவாத சக்திகளின் ஆதரவை அணிதிரட்டும் நோக்குடனேயே சந்திரிகா அரசு இந்தக் கீழ்த்தரமான நடவடிக்கையில் இறங்கியிருப்பதாக விடுதலைப் புலிகள் குற்றம் சாட்டியுள்ளனர்.

'யாழ்ப்பாணத்தை மீண்டும் கைப்பற்றும் நோக்குடன் விடுதலைப் புலிகள் மேற்கொண்டுவந்த போர் ஆயுதங்களை முறியடிப்பதற்காகவே ஆகாயக் குண்டுவீச்சுக்களும், பீரங்கித் தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டதாக சிறீலங்கா அரசு ஒரு கட்டுக்கதையைப் புனைந்திருக்கிறது. இந்தக் கூற்றில் எவ்வித உண்மையும் இல்லை. சிங்கள அரசு கற்பித்தது போன்று விடுதலைப் புலிகள் பெரிய அளவில் போர் ஆயுதங்கள் எதுவும் செய்யவில்லை. புலனாய்வுத் தகவல்கள் கூறியதாக அரசு சொல்வது எல்லாமே வெறும் கட்டுக்கதை. நம்பிக்கையில்லாத் தீர்மானத்தால் எழுந்த நெருக்கடியைச் சமாளிப்பதற்காகவே அரசாங்கம் போரைத் தீவிரப்படுத்தி மக்களின் கவனத்தை திசைதிருப்ப முனைகிறது. பேரினவாத, தீவிரவாத சக்திகளை தனக்கு ஆதரவாக அணிதிரட்டும் நோக்குடனேயே தமிழருக்கு எதிராகப் போரை தீவிரப்படுத்த முனைகிறது. தொடரும் போரினால் எழுந்த பொருளாதாரச் சுமைகளை தாங்கமுடியாத தென்னிலங்கைச் சிங்கள மக்கள் சந்திரிகாவின் ஆட்சிப்பீடம் மீது அத்திர்மும், பொறாமையும் கொண்டுள்ளனர். இச்சூழலில், தேசிய சிறுபான்மை இனத்தவர்களுக்கு எதிரான முறையில் சிங்களத் தேசியவாதத்தைத் தட்டியெழுப்பும் நோக்குடன் அரசாங்கம் விசமப் பிரச்சாரங்களை மேற்கொண்டுவருகிறது. இதுவொரு ஆபத்தான போக்கு. இந்த அரசாங்கத்திடம் ஆக்கபூர்வமான கொள்கை எதுவுமில்லை என்பதையே இது எடுத்துக்காட்டுகிறது. இந்நாடு எதிர்கொள்ளும் எந்தப் பிரச்சினையையும் தீர்த்துவைப்பதற்கு இந்த அரசு தவறிவிட்டது' எனப் புலிகளின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

'நோர்வே அரசின் சமாதான முயற்சிக்கு ஊக்கம் அளிக்கும் நோக்கில் நாம் சில முயற்சிகளையும் மேற்கொண்டோம். நீண்ட காலத்திற்கு தொடர்ச்சியாகப் போர்நிறுத்தம் செய்தோம். தென்னிலங்கையில் வன்முறைத் தாக்குதல்களைத் தவிர்த்தோம். சர்வதேச சமூகம் சிறீலங்கா அரசாங்கத்தை சமாதானப் பாதையில் இட்டுவரும் என்ற நம்பிக்கையுடன் நாம் இப்பொழுதும் பிரகடனப்படுத்தாத சமாதானம் பேணி போர் நடவடிக்கைகளைத் தவிர்த்துவருகிறோம். ஆனால் சிறீலங்கா அரசாங்கமோ சமாதானத்திற்கு விரோதமான தந்திரோபாயங்களையும் கொள்கைகளையுமே கடைப்பிடித்துவருகிறது. நோர்வேயின் அனுசரணை முயற்சியில் குறுக்கிட்டு இரு தரப்பினராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட சமாதானத் தூதுவர் எரிக் சொல்கெய்மின் அந்தஸ்தைக் குறைத்து ஒரம்கட்டியதால் சமாதான வழிமுறைக்குப் பெரிய பாதகத்தை ஏற்படுத்தியிருக்கிறது. அத்தோடு, இப்பொழுது வான் தாக்குதல்களை தீவிரப்படுத்தியதால் சமாதான முயற்சிகளுக்கு நிரந்தரமான பாதிப்பு ஏற்படும் சூழ்நிலையையும் உருவாக்கிஎள்ளது' இவ்வாறு புலிகளின் அறிக்கை கூறுகிறது.

தமிழர் தாயகத்தில் போர்நிலைமை தீவிரப்படுத்தப்படுமாயின் அதனால் ஏற்படக்கூடிய பாதகமான விளைவுகளுக்கு அரசாங்கமே முழுப் பொறுப்பையும் ஏற்கவேண்டும் என்றும் விடுதலைப் புலிகள் இயக்கம் தனது அறிக்கையின் முடிவுரையில் கடுமையாக எச்சரித்தும் உள்ளது.

கசக்கும் சர்வதேச விமர்சனங்கள்

சிறீலங்கா அரசின் இரட்டை வேடத்தை புரிந்துகொண்டோ என்னவோ, சிறீலங்கா அரசின் இராணுவ முக்கொடுப்புக் குறித்து, இரண்டு நாடுகள் வெளிப்படையாகவே தமது அதிருப்தியை வெளியிட்டிருந்தன. நோர்வேயின் சமாதான முயற்சிகள் ஒரு புறத்தே நடைபெற்றுவருவதாக சிறீலங்கா அரசு கூறிக்கொள்ளும் அதேவேளை, பூநகரி, எழுதுமட்டுவாள் பகுதிகளில் விடுதலைப் புலிகளின் நிலைகளைக் குறிவைத்து, கடந்த மாதத்தின் இறுதியிலும் இம்மாதத்தின் முற்பகுதியில் மேற்கொண்ட கடுமையான குண்டுவீச்சுக்கள், எறிகணைத் தாக்குதல்களை நடத்தியது. சந்திரிகா அரசின் இந்த இரட்டை நடிப்பை, இலங்கைப் பிரச்சினையை உள்ளீர்ப்பாக அவதானிக்கும் தரப்பினரிடையே கடுமையான அதிருப்தியையும், குழப்பத்தையும் ஏற்படுத்தியிருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

இவ்வாறு, யூலை 2ம் திகதி, விடுதலைப் புலிகளின் தலைமைச் செயலகத்தால் வெளியிடப்பட்ட அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. அத்துடன், சிறீலங்கா அரசின் இத்தகைய அணுகுமுறையானது நோர்வேயின் சமாதான முயற்சிகளை நிரந்தரமாகவே பாதிப்புறும் எனவும் விடுதலைப் புலிகள் சிறீலங்கா அரசைக் கடுமையாக எச்சரிக்கை செய்தும் இருந்தனர். இதுவிடயத்தில் தமக்குரிய பொறுப்பை உணர்ந்துகொண்ட இந்தியா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள், சிறீலங்கா அரசின் குண்டுவீச்சுத் தாக்குதல் குறித்து, பகிரங்கமாக விமர்சனம் செய்து அறிக்கை வெளியிட்டன.

விடுதலைப் புலிகளின் நிலைகள் மீது சிறீலங்காப்படையினர் மேற்கொண்ட குண்டுவீச்சுக்கள் குறித்து, தமது கரிசனையையும் அதிருப்தியையும் வெளியிட்டது அமெரிக்கத் தூதரகம். கூடவே ஒரு விடயத்தையும் அது சிறீலங்கா அரசுக்கு அறிவுறுத்த விரும்பியது. வன்முறைகள் வன்முறையையே தோற்றுவிக்கும் என்பதையும், அமெரிக்க தூதரகமும் தான் விடுத்த அறிக்கையில் தெரிவித்திருக்கின்றது.

இந்தியத் தூதரகமும், இக்குண்டு வீச்சுக்கள் குறித்த தனது அதிருப்தியை, சிறீலங்கா அரசுக்குத் தெரியப்படுத்தியது. சமாதானத்தை அடைவதற்கு பேச்சுவார்த்தை தவிர மாற்று வழி இல்லை என்பதைச் சிறீலங்காவிற்குத் தெரியப் படுத்திய இந்திய அரசு, நோர்வேயின் சமாதான முயற்சிகள் இடம்பெறும் இத்தருணத்தில், விடுதலைப் புலிகளின் நிலைகள் மீது குண்டுவீச்சுக்கள் நடத்தியிருப்பது குறித்து, தனது அதிருப்தியை வெளியிட்டது.

உலக நாடுகள் யாவும் தனது நிலைப்பாட்டை ஆதரிக்கவேண்டும், தனது செயற்பாடுகளை விமர்சனம் செய்யக்கூடாது, தனது விருப்பத்திற்கேற்பவே நடந்து கொள்ளவேண்டும் என்ற கிஞ்சுத்தனமான சிந்தனையில் உழலும் சிறீலங்கா அரசால் இத்தகைய கருத்துக்களை, விமர்சனங்களை ஜீரணித்துக்கொள்ளமுடியவில்லை.

வழக்கம்போல, சிறீலங்காவின் வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் தனது வாயைத் திறந்தார். அரசாங்கத்தின் குண்டுவீசத் தாக்குதல்கள் குறித்து அறிவுறுத்தி தெரிவித்தவர்கள் மீது கண்டனக் கணைகளை வீசினார்.

இறைமையும் தன்னாதிக்கமும் உள்ள ஒரு நாடு, தனது சுயபாதுகாப்பிற்காக இத்தகைய தாக்குதலை மேற்கொள்ளும் என்றும், இதனை எந்த நாடுகளும் பிழை என்று கூறலோ, அதனை மேற்கொள்ள வேண்டாம் என்று வலியுறுத்தலோ முடியாது எனவும் கதிர்காமர் கடுந்தூரத் துள்ளார்.

கதிர்காமரின் பொறுப்படையான இந்த கடிந்துரைப்பு, இந்தியா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளைக் குறிவைத்தே என்பது தெளிவானது. இத்தூடன் நின்று விடாது, சிறீலங்காவிற்கு மனம் இல்லை.

இந்தியாவின் கருத்தை மேலும் சேதப்படுத்தும் வண்ணம், சிறீலங்காவின் வெளிவிவகார அமைச்சகம், பின்னராக அதிகாரபூர்வமற்ற வெளியீட்டில் அது அமெரிக்காவை சற்று மிதமாகவும், இந்தியாவை சற்று கடுமையாகவும் விமர்சிக்கும் பாணியில் அமைத்தது.

குண்டுவீச்சு தொடர்பாக இந்தியா அதிருப்தி தெரிவித்து வெளியிட்ட கருத்தை, உண்மைக்குப் புறம்பானதும் ஏற்றுக் கொள்ளமுடியாததும் என, சிறீலங்காவின் வெளிவிவகார அமைச்சகம் நிராகரித்தது.

தரமுயர்த்தல் என்பது இதுதானோ..?

யூன் மாதம் 7ம் திகதி, நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் திரு. ஜாக்லான்ட் கொழும்பு சென்றிருந்தார். கூடவே, சமாதானத்திற்கான சிறப்புத் தூதுவர் திரு. எரிக் சொல்கைமும் உடன் சென்றிருந்தார். சிறீலங்கா சனாதிபதி சந்திரிகாவின் விசேட அழைப்பின்பேரில் நோர்வேயின் தூதுக்குழுவினர் கொழும்பு சென்றிருந்தனர். ஆனால், திரு. எரிக் சொல்கைம் அவர்களை, தவிர்த்துவிட்டு, திரு. ஜாக்லான்ட் அவர்களை மாத்திரம் சனாதிபதி மாளிகைக்கு அழைத்துப்பேசியிருந்தார் சந்திரிகா. கூடவே, கதிர்காமரும் உடனிருந்தார். இந்தச் சந்திப்பு நடைபெற்ற மறுநாளே, சந்திரிகா அரசு, சமாதான முயற்சியைத் தரமுயர்த்தியிருப்பதாக அறிவித்திருந்தது. விடுதலைப் புலிகளைக் கலந்தாலோசிக்காமல், முத்தரப்பு விவகாரத்தை இருதரப்பாரே தம் இஸ்டப்படி கலந்துபேசி மேற்கொண்ட இத் 'தரமுயர்த்தல்' நடவடிக்கையை விடுதலைப் புலிகள் கடுமையாக கண்டனம் செய்து அறிக்கை விடுத்திருந்தார்கள். இராஜதந்திரச் சதிவலையில் சிக்கவைத்து, திரு. எரிக் சொல்கைம் அவர்களை, சமாதானமுயற்சியில் இருந்து ஒரம்கட்டிவிட எடுக்கப்பட்ட முயற்சி இது என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை.

சிறீலங்கா அரசு அறிவித்தது போல், இந்தத் 'தரமுயர்த்தல்' முயற்சி நடைபெற்று ஒரு மாதகாலம் முடிவடைந்துவிட்டது. நோர்வேயின் உயர்மட்ட சமாதானத் தூதுக்குழு, மேற்கொண்டு எந்தவிதமான நகர்வையும் மேற்கொண்டதாகத் தெரியவில்லை. ஆனால், இந்தத் 'தரமுயர்த்தல்' நாடகம் நடைபெற்று ஒரு மாதத்தில், சிறீலங்கா அரசு, பாரியகுண்டுவீச்சுக்களை தமிழர் பகுதியில் மேற்கொண்டது. மிக மோசமான குண்டுவீச்சுக்கள், எறிகணைத் தாக்குதல்களை சிங்களப் படையினர் இரண்டு நாட்களாக மேற்கொண்டனர்.

விடுதலைப் புலிகள் பெரும் தாக்குதலுக்குத் தயாராகின்றார்கள், அதனை முறியடிக்கவே தாம் தாக்குதல் நடத்தியதாக, இத்தாக்குதல் குறித்து முகம்சுழிக்கும் தூதுவை சமாளிக்க சந்திரிகா அரசு கதையளந்து வருகின்றது. இதனைக் கூறிக்கூறியே சிறீலங்கா அரசு பெரும் இராணுவ நடவடிக்கையை தமிழ்தாயகத்தில் மேற் கொள்ளலாம் என்று நினைக்கின்றது போலும்.

சந்திரிகாவின் சமாதானச் சமிக்ஞையின் பிரமாண்டம்...?

யூன் 30ம் திகதி, யூலை முதலாம் திகதி ஆகிய இருநாட்களில், சிங்களப் படையினர் தமிழர் பகுதியில் கொட்டித்தீர்த்த குண்டுகளினால் ஏற்பட்ட பாதிப்பை, அது கொட்டித்தீர்த்த குண்டுகளின் கனதியில் புரிந்துகொள்ளமுடியும். பூநகரி, முழங்காவில், திருநெல்வேலி, தென்மராட்சிப் பகுதிகள், வடமராட்சி கிழக்கு, முல்லைத்தீவு ஆகிய பகுதிகளில், சிறீலங்கா விமானப்படையின் நவீன போர் விமானங்களான கீபிர் ஜெற்விமானங்களும், மிக்-27 போர்விமானங்களும் மோசமான தாக்குதலை நடத்தின. இருபதுக்கும் மேற்பட்ட தடவைகள், இப்பகுதிகளில் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன என பத்திரிகைத் தகவல் ஒன்று தெரிவிக்கின்றது. கீபிர் விமானம் ஒன்று ஒரு தடவையில் 4500கிலோகிராம் நிறையுள்ள வெடிபொருட்களையும், மிக் விமானம் ஒன்று ஒரு தடவையில் 4000 கிலோகிராம் வெடிபொருட்களையும் காவிச் சென்று தாக்குதல் நடத்தியுள்ளன.

ஒரே நேரத்தில், இயல்பு போர்விமானங்களும் 8500கிலோகிராம் குண்டைக் காவிச் சென்று தமிழர் பகுதியில் கொட்டியுள்ளன. இருபது தடவை பறப்புக்களை மேற்கொண்ட இவ்வீர யுத்தவிமானங்களும் கொட்டித்தீர்த்த பேரழிவுதரும் குண்டுகளின் நிறை ஒரு இலட்சத்து எழுபத்தைந்தாயிரம் கிலோகிராம். அழிவின் பிரமாண்டம் எத்தகையது என்பதை, மனதுக்குள் கணக்கிட்டுப் பாருங்கள்.

மருந்துப் பொருட்களுக்கு சிவப்புக்கொடி மதுபானத்திற்கோ பச்சைக்கொடி

யாழ் குடாநாட்டில் வைத்திய சாலைகளில் மருத்துப் பொருட்களுக்கு பெரும்த நெருக்கடி நிலை உருவாகிருக்கின்றது. எக்ஸ்றே படம் எடுப்பது. அதற்குரிய இரசாயனக்கலவையை இராணுவம் அனுமதிக்க மறுத்திருப்பதையடுத்து யாழ் வைத்திய சாலையில் நிறுத்திவைக்கப்பட்டிருக்கின்றது. பிரசவத்தின்போது பாவிக்கப்படும் மருந்துகள் இல்லை. யாழ் வைத்திய சாலைக்குத் தேவையான மருத்துவக் கருவிகள், மருந்துப்பொருட்களை எடுத்துவர சிறிலங்காப் பாதுகாப்பமைச்சு அனுமதி தரமறுக்கின்றது. அப்படி அனுமதித்தாலும் கேட்கப்பட்ட பொருட்களின் கால்பங்கையே கொண்டு செல்ல அனுமதிக்கின்றது. இப்படியாக... யாழ் குடாநாட்டு நிலவரங்கள் குறித்து நாளும் பொழுதும் செய்திகள் வந்தவண்ணமுள்ளன.

மக்களின் வைத்தியத் தேவைக்கான மருந்துப்பொருட்களையும், மக்களின் வாழ்க்கைத் தேவைகளையும் முடக்கி வரும் சந்திரிகா அரசு, யாழ் குடாநாட்டில் குடிமன்னர்களை உருவாக்க, கட்டுப்பாடில்லாமல் மதுவகைகளை அனுப்பி வைக்கின்றது என்பது கவலைதருகின்ற செய்தி.

யாழ் குடாநாட்டில், கடந்த சில ஆண்டுகளில் மதுபானப் பாவனை மூன்று மடங்காக அதிகரித்திருக்கின்றது சர்வதேச செய்தி நிறுவனமான பி.பி.சி. இது விடயத்தில் ஆய்வு செய்யும் அனைத்து பிரச்சினை விஸ்வரூபம் எடுத்திருக்கின்றது. சமூக நல விரும்பிகளும், வைத்தியர்கள், கல்வியாளர்கள் மாணவசமூகம் என்பன இதுவிடயத்தில் கவலைகொண்டிருப்பதுடன், இதனைத் தடுக்கும் நடவடிக்கையை ஆரம்பித்துவருவதுடன், இந்த மோசமான சமூகப் பிரச்சினையைத் தடுக்க, பிரச்சார நடவடிக்கையிலும் ஈடுபட்டுள்ளனர்.

குடாநாடு, சிங்களப்படையால் ஆக்கிரமிக்கப்பட்டதன் பின்னர், இளம் சந்ததியினரை, சீரழித்து விடுதலைப் போராட்டத்தில் இருந்து அவர்களை அந்நியப் படுத்திவிட, சந்திரிகா அரசு, திட்டமிட்டே பல காரியங்களைச் செய்துவந்திருக்கின்றது.

யாழ் மாநகரசபை எல்லைக்குள் மட்டும் முப்பதுக்கும் மேற்பட்ட மதுபானக்கடைகள் திறக்கப்பட்டுள்ளன. பாடசாலைகளை அண்மித்தோ, கோவில்கள், மதவழிபாட்டுத் தலங்கள் அமைந்திருக்கும் பகுதிகளிலோ மதுபானக்கடைகளோ கனிபட்ட வைபங்களோ அமைக்கப்படக்கூடாது என்ற ஒரு பொதுவான விதியிருக்க, சிங்களப் படையினரோ குடாநாட்டில், இவ்விதிமுறைக்கு மாறாக இத்தகைய வைபங்கள் அமைக்க வசதியளித்துவருகின்றனர்.

யாழ் பல்கலைக்கழக வளாகத்தின் சுற்றவட்டாரத்தில் மாத்திரம் பதினைந்துக்கும் மேற்பட்ட மதுபானக்கடைகள் திறக்கப்பட்டுள்ளன.

மதுபானப் பழக்கத்திற்கு இளம் சந்ததியினர் இலகுவாக இலக்காகின்றனர் என்பதுடன், பண்பில் சிறுவர்களும் இப்பழக்கத்திற்கு பலியாகின்றனர் என்பது கவலை தருகின்ற விடயம். ஆக்கிரமிப்புப் படைகள் நிலைகொண்டிருக்கும் பூமியில், இத்தகைய பாதகங்கள் விளைவது பொதுவிதியாகவே உள்ளது. ஆக்கிரமிப்புப் படைகள் வெளியேற்றப்படும்வரை இத்தகைய பாதகங்களுக்கு அதன் ஆளும்தரப்பு உத்தரவாதம் கொண்டே இருக்கும்.

நீதிக்கு எல்லை கிடையாது

தமிழர் மனித உரிமை மையம் -TCHR

ஒரு தேசிய இன, சாதி, சமய அடிப்படையின் கீழ் முற்றாக அல்லது ஒரு பகுதியை அழிக்கும் நோக்குடன் எடுக்கப்படும் சில செயற்பாடுகளை இன அழிப்பு என்று, இன அழிப்புப் பற்றிய ஐ.நா. மகாநாடு வரையறை கூறுகின்றது.

இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட நாடுகள் உறுதி செய்திருப்பதின்படி அமைதியான காலத்திலும்சரி, யுத்த காலத்திலும்சரி செய்யப்படுகிற இன அழிப்புக்கள் சர்வதேச சட்டத்தின்கீழ் தடுக்கப்பட்டு, தண்டிக்கப்பட வேண்டியவையாக கீழ்வரும் செயற்பாடுகள் உள்ளன.

இன அழிப்பு, இன அழிப்புக்கான சதி, நேரடியாகவும், பகிரங்கமாகவும் இன அழிப்புக்கு தூண்டுதல், இன அழிப்பு முயற்சி எடுத்தல், இன அழிப்புக்கு உடந்தையாய் இருத்தல்.

கடந்த பதினைட்டு வருடங்களில் பல காணாமல் போதல்கள், கூட்டுப்படு கொலைகளும், இன அழிப்புகளும் இலங்கைத்தீவில் நடந்தேறி உள்ளது. இரண்டில் தொடங்கி பல கொலைகளாகி இன்று எழுபதினாயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் கொலைசெய்யப்பட்டிருக்கின்றார்கள். பலகோடி பெறுமதியான தனியார் சொத்துக்களும், மத, கலை நிறுவனங்களும், முற்றாக அழிக்கப்பட்டு அல்லது சேதப்படுத்தப்பட்டு இருக்கின்றது. பத்து இலட்சம் மக்கள் இடம்பெயர்ந்திருக்கின்றார்கள். நாலு இலட்சம் மக்கள் அகதிகளாக வேறு நாடுகளுக்கு புலம்பெயர்ந்து இருக்கின்றார்கள்.

மனித உரிமை மீறியவர்களுக்கு சன்மானம் அழிப்பதில் இலங்கைத்தீவு உலக சாதனைப் புத்தகத்தில் இடம்பெறவேண்டிய ஒன்று. J.V.P கிளர்ச்சியின்போது செய்த அத்துமீறல்களுக்கு சன்மானமாக பதவி உயர்வுன், மேஜர் ஜெனரல் ஜானக பெரேராவும் அவர்களின் தோழர்களும் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்பட்டார்கள். தற்போது தமிழரின் பாரம்பரிய பகுதிகளில் அவர் செய்த மனித உரிமை மீறல்களுக்குச் சன்மானமாக அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகராக அனுப்பப்பட்டுள்ளார். சிலர் அபிவிரயமடைவு, இராணுவப் புரட்சியை சிறீலங்காவில் தவிர்ப்பதற்கு முன்நடவடிக்கையாக அனுப்பப்பட்டிருக்கின்றார். இலங்கையில் மனித வள்க்கத்திற்கு எதிரான குற்றச்செயல்களின் கீழ் பலவேறு நடவடிக்கைகள், பாதுகாக்கப்படவேண்டிய மக்களுக்கும் அவர்களின் சொத்துக்களுக்கும் எதிரான நடவடிக்கைகள், திட்டமிட்ட கொலைகள், சித்திரவதைகள், மனித மாண்புக்கு எதிரான நடவடிக்கைகள், அவர்கள் தமிழர்கள் என்பதினாலேயே வேண்டுமென்றே தாங்கமுடியாத துன்புறுத்தல்கள், நீண்ட காலமாகவே தமிழர் கள்மேல் கொடூரமான கொலைகளையும் ஏவிவிட்ட பலர், தொடர்ச்சியாக வந்த அரசாங்கங்களின் கீழ் நீதிக்குத் தப்பி பலவருடமாக வாழுகின்றார்கள். உயிர் வாழ்வதற்குரிய உரிமைகளைப் பறிப்பவர் களை சிலில் அல்லது இராணுவ விசாரணைக்கு உட்படுத்தப்படாமல் தொடர்ச்சியாக அவர்கள் நடமாட அனுமதிப்பது, அவர்களை சட்டத்தில் இருந்து தப்ப உதவுகின்றது என்று கூறுகின்றார், சட்டத்திற்குப்புறம்பான கொலைகளை ஆராய்ந்த ஐ.நா.வின் விசேட பிரதிநிதி.

பயங்கரவாதத் தடைச்சட்டமும், அவசரகாலச் சட்டமும் சட்ட ஒழுங்குகளை மீறுகின்றன. புத்திசாலித்தனமாகவும், சாமர்த்தியமாகவும், நீதி ஜனநாயகம் என்ற போர்வையில் இலங்கையில் பல அட்டூழியங்களைச் செய்ய இடமளிக்கின்றது. போராளிகள் போராளிகள் தான் ஆகையால்தான் அவர்களை போராளிகள் என்கின்றார்கள். ஆனால் அரசாங்கம் பிரஜைகளின் நண்பர்களாக இருக்க வேண்டும் என்று இறுதியாக நடந்த ஐ.நா. மனித உரிமைகளுக்கான ஆணைக் குழுக் கூட்டத்தில் நீதிக்கு [illegible] கொலைகளுக்கான விசேட பிரதிநிதி மேலும் கூறுகின்றார். தூரதிஸ்ட வசமாக இலங்கை அரசாங்கம் நீதித்துறையில் பாகுபாடான இரட்டை வேடங்களைக் கடைப்பிடிக்கின்றது. இலங்கைத்தீவில் உள்ள தமிழ் மக்களுக்கு மட்டும் 20 விதமான அடையாள அட்டைகளும், அனுமதிப்பத்திரங்களும் இருக்கின்றன.

தமிழர்களுக்கு எதிரான பெருந் தொகையான மனித உரிமை மீறல்கள், விசாரணையோ, நீதியோ, தீர்ப்போ இல்லாமல் தப்பிவிடுகின்றது. ஆனால் சர்வதேச அழுத்தத்தின் காரணமாக ஒருசில மனித உரிமை மீறல்கள் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டாலும், (ஆதாரம் இல்லாமல்) கைவிடப்பட்டு விடுகின்றன. காலவரை அற்று பிற்போடப்படுகின்றது. அல்லது ஆதாரங்கள் போதாது என்று வழமைபோல வழக்கு முடிப்படுகின்றது.

இதற்கு நூற்றுக்கணக்கான ஆதாரங்கள் இருக்கின்றன. ஆனால் சர்வதேச சமூகத்தின் கவனத்திற்கு அண்மைக்கால சில சம்பவங்களைக் குறிப்பிடுவோம். கோணேஸ்வரி, சாரதாம்பாள், பிந்துனுவெவ படுகொலைகள். இவை அமைதிக்கும் எதிரான குற்றச்செயல்கள். இலங்கைத்வு தனது வன்முறைகளை தனது நாட்டு எல்லைகளையும் தாண்டி உலகின் எல்லா மூலைகளுக்கும் எடுத்துச் செல்லுகின்றது. வெளிநாடுகளுக்கு அகதிகளாக வந்திருக்கும் தமிழர்களை சிறீலங்கா துன் புறுத்துகின்றது. பயங்கரவாதம் பயங்கரவாதிகள் என்ற வார்த்தைகள் மூலம், தனது ஆகாத்தன்மையை மறைத்து சர்வ தேச சமூகத்தை நிசைதிருப்புகிறது.

தமிழர்களை வரவேற்கும் நாடுகளை நொந்து பயனில்லை. 'எம்மவனை விட்டு அம்பை நொந்து பயனில்லை' என்ற தமிழ் பழமொழி பொருத்துகிறது. ஆனால், இந்த நாடுகள் செய்கிற எல்லாவற்றையும் நியாயப்படுத்த முடியாது. வர்த்தக நோக்கங்களும், உள்நாட்டு அரசியல்களும், இந்தநாடுகளின் செயற் பாடுகளில் பெரும்பங்கு வகிக்கிறது.

சர்வதேச மனித உரிமைச் சட்டங் களின் வரையறைக்குள், இலங்கை அரசியல் வாதிகளும் பாதுகாப்பு அதிகாரிகளும், யுத்தக் குற்றங்களுக்காகவும், மனிதவர்க்கத்திற்கு எதிரான குற்றங்களுக்காகவும், இன அழிப்புக் குற்றங்களுக்காகவும், களைக்கு கொடுக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள். நாகரீகமான ஜனநாயக நாடுகளில் வாழுகின்ற நாம் அந்நாடுகளின் சட்டங் களுள் பிரயோகப்படுத்தி, இந்த நாடுகளுக்கு எதிரான அல்ல மாறாக புலம்பெயர் நாடுகளின் சட்ட திட்டங்களை பயன் படுத்தவேண்டும்.

சிறீலங்காவில் இழைக்கப்பட்ட மனித உரிமை மீறல்களுக்கு அங்கு நீதிவிடைக்கும் என்று எதிர்பார்க்கமுடியாது.

இலங்கையின் யுத்தக்குற்றவாளிகளுக்கு எதிராக புலம்பெயர் நாடுகளில் சட்ட நடவடிக்கைகள் எடுக்க சட்டநிபுணர்களினதும், சட்டத்தரணிகளினதும் ஆலோசனைகளை விரைவில் நாடவேண்டும். அதன்மூலம் வெளிநாடுகளாவது அவர்களை நீதியின் முன் நிறுத்த முன்வரவேண்டும். இதில் அரசியல் தலைவர்கள், இராணுவம், பொலிஸ், கடற்படை, விமானப்படை விசேட அதிரடிப்படை என பாதுகாப்பு படையினரும் அடங்குகின்றனர்.

மேலே கொடுக்கப்பட்ட விபரங்கள் ஏதுமே தமிழ் தொலைக்காட்சிகளில் பூரண மாதம் பேசும். பேசும் நிகழ்வில் இரு தலை தமிழர் மனித உரிமை மையத்தினால் முன்வைக்கப்படுகிறது.

அவுஸ்திரேலிய வீதியில் ஜானக பெரேரா

இது, உண்மையான மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா அல்ல. அவரைப் போன்று வேடமணிந்த தமிழர் அவருடன் இருப்பவர்கள் சிங்கள இராணுவத்தைப் போன்று உடையணிந்து மிடுக்காக காட்சியளிக்கும் தமிழர்களே. இது, அவுஸ்திரேலிய கன்பராவில் நடைபெற்ற ஆர்ப்பாட்ட நிகழ்வில், இடம்பெற்ற காட்சி. சிறீலங்காவின் அவுஸ்திரேலிய தூதுவராக முன்னாள் இராணுவ கட்டளைதிகாரி மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா நியமனம் பெற்றதைக் கண்டித்து, அவுஸ்திரேலியாவாழ் தமிழர்கள் நடத்திய பிரமாண்டமான எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின்போது, ஜானக பெரேரா சுடுநீரால் நீட்ட அரசைச் சூழ்ந்தும் இராணுவத்தினர், அவர் சுடிக்காட்டிய திசையில் தமிழர்களை வேட்டையாடுவதான காட்சிகள் அந்த ஆர்ப்பாட்டத்தின்போது இடம்பெற்றது தமிழிழ விடுதலைப் போராட்ட நடத்தை, கன்பரா வீதியில் தமிழர்கள் நடத்துகாட்டினர். தமிழர்களின் இரத்தத்தில் கைகளைத்தடவி, தமிழர் தாயகத்து வீதிகளில் படையடுத்துள்ளதாக உலகத்து சிங்களத்துத் தளபதி ஜானக பெரேரா அவுஸ்திரேலிய வீதிகளில், மாண்புமிகு தூதுவராக பவனி வரப்போகிறார் என்பது விந்தையாக இருக்கிறதல்லவா.

தேசத்தின் புயல்கள்

ஏற்கெனவே எல்லா வழிகளிலும்
அவர்களைச் சொல்லியாகிவிட்டது.
பாடல்கள் இசைத்து,
கட்டுரைகள் யாத்து, கவிதைகள்
படைத்து, ஓவியங்கள் தீட்டி, உரைகள்
முழக்கி, படங்களாய்க் காட்டி-
எப்படியெப்படி முடியுமோ
அப்படியெல்லாம்; எவரெவரால்
முடியுமோ அவர்களாலெல்லாம் -

ஏற்கெனவே எல்லா வழிகளிலும்
அவர்களைச் சொல்லியாகிவிட்டது.
ஆனாலும் சற்றில் தம்முயற்சியில்
எவராலும் வெல்ல முடிந்ததா....?
இதுவரை இல்லை!

நாம் என்ன செய்தோம்?
பார்த்துணர முடிந்த, கேட்டுணர முடிந்த,
தொட்டுணர முடிந்த அவர்களது
வெளித்தோற்றப்பாட்டை
தலப்படையாகக்கொண்டு, எம் சிந்தனா
சக்தியினால் கணிப்பீடு செய்ய முடிந்த
அவர்களது உள்ளுணர்வுகளுக்கு மட்டுமே,
நாம் கலைகளில் வடிவங்கொடுத்தோம்.
இவற்றைக் கடந்து சென்று -

தேசபக்தியினாலும், இனப்பற்றினாலும்,
சமூக நேசத்தினாலும் உச்ச
உயர் பீடங்களில் வீற்றிருந்த அவர்களது
ஆத்மாக்களின் ஆழமான
பரிமாணங்களை, எம்மில் எவரால்
கண்டறிந்து வெளிப்படுத்த முடிந்தது...?
இதுவரையும் இல்லை, இனிமேலும்
இல்லை!
உரிமை கோரியும், உரிமை
கோராமலும் நிகழ்த்தப்பட்ட கரும்புலி
நடவடிக்கைகளினாலும் ஏற்படுத்திய தாக்கமிகு விளைவுகளின்
அரசியல், இராஜதந்திர
இராணுவப் பரிமாணங்களைக் கணிப்பிட்டு
ஆய்வு செய்ய முடிந்த எம்மால், அந்த
ஒப்பற்ற சாதனைகளின்
சொந்தக்காரர்களது மனவுணர்வுகளின்
ஆழத்தையும், அகலத்தையும்
அளவெடுக்க முடிந்ததா..? இல்லை!
உண்மையிலேயே, வார்த்தைகளால்
வரம்பு கட்டும் வரையறைகளுக்கு
அப்பாலே இன்னமும் வாழுகின்ற,
சாகாவரம் பெற்ற சிரஞ்சீவிகளாய்
எம் நினைவுகளை என்றும்
நிறைத்திருக்கும் அவர்கள், சொற்களின்
சோடனைகளால் தலங்கரிக்க முடியாத
அற்புதங்களேதான்!

எண்ணுகின்ற போதெல்லாம் நெஞ்சு
விம்முகின்றது! அந்தப் புரியாத
புதிர்களால் விக்கின்றது!

நிலமதிர உயிரழிந்தும், கடலதிர
உருக்குலைந்தும், தமிழனின் சுதந்திர
வேட்கையை உலகதிர முரசறைந்த
அவர்கள், தமிழீழ தேசத்தின் நெருப்பு
மனிதர்கள்!
தமிழனைக் கொன்றவர்களைக்
கொன்று, தமிழனை எரித்தவர்களை
எரித்து, நான் அழியும் கடைசி
நொடியிலும் தமிழின பகையழிக்கும்
குறிக்கோளில் தலையாத இலட்சிய
வேங்கைகள்!

பலஸ்தீனப்பட்ட எம் இனத்தின்
பலமெனத் தோற்றம்கொண்டு,
'தம்பாகவும் விலாகவும்' எம்மை
அழித்தவர்களையெல்லாம் அழித்து,
பழிக்குப்பழிவெடுத்த கர்மவீர்கள்!

கயத்தின் பற்றுக்களைத் தூர்த்து,
ஆசையின் வேர்களைப் பிடுங்கி,
தனிப்பட்ட வாழ்வின் இலட்சியங்களைக்
களைந்து, இனத்தின் விடிவு ஒன்றையே
தலையிய ஈகத்தின் உன்னதங்கள்!

வாழ்வில் விருப்பிருந்தும், சாவில்
வெறுப்பிருந்தும், தாய்த்திரு நாட்டிற்கு
கடமையென வந்தபோது, நாங்களும்
நாடும் இன்றிருக்கவென தம்மையே
இல்லாதழித்த தெய்வீகப் பிறவிகள்!
வெளித்தெரிந்தும்
வெளித்தெரியாமலும்
முகம் காட்டியும்
முகம் காட்டாமலும் - பக்கத்திலும்
எட்டத்திலுமாகக் கண்ணுக்கெட்டிய
வாழ்வின் வழிகாட்டிகள்!

முகம் மறைத்து, தாம் புரிந்த
அரும்பெருஞ் செயல் மறைத்து,
பெயர் மறைத்து, தாம் பெறும்
மாபெரும் புகழ் மறைத்து, இனத்தின்
நலன் ஒன்றையே இலட்சியமாய் வரித்து,
நிஜயத்தில் படைத்த சாதனைகளின்
பின்னால் நிழல்களாய்த் தூங்கும்
சரித்திரங்கள்!

தலைப்பட்டு தலைப்பட்டு, நலிவற்று
அழிவற்று, தழது புலம்பிக் கிடந்த
தமிழினத்திற்காக உலகின்
ஈடு இணையற்ற வீரப்படையணியென -
மாபெரும் தலைவன் பிரபாகரன
தோற்றுவித்த மனிதக் கணைகள்!

நீண்ட உலக வரலாற்றில்
முதற்தடவையாக, உயிரொடுத்து
பகையழிக்கும் 'தற்கொடைப்படை'
பொத்திரண்டு, இனத்திற்குப் பெருமை
தந்த
எம் 'தேசத்தின் புயல்கள்'?

தமிழீழத் தனியரசை நிறுவி,
அவர்களது திருப்பாதங்களின்மீது
காணிக்கையாக்குவதைத் தவிர -
அன்னையர்களுக்குச் செலுத்தக்கூடிய
அஞ்சலி வேறென்ன
இருக்கப்போகின்றது!
வழியே இல்லைதான் -
கதறியழுதைத் தவிர!

தி. இளியவன்

இவர்களாலேதான்...

நா. குமார்

'லீவில் போகவிருக்கிற ஆக்களையெல்லாம் அள்ளை வாட்டம்'

ஒரு போராளி எல்லா இடங்களுக்கும் வந்துசெல்லிவிட்டுப் போனாள், எனது வாசிப்பு தடைப்பட்டதால், வாசித்துக்கொண்டிருந்த புத்தகத்தை மூடிவைத்துவிட்டு சுற்றுமுற்றும் பார்த்தேன். ஒவ்வொருவராக எழுந்து போகத் தொடங்கினர். கடைசியில், எஞ்சியிருந்தவர்களை தோட்டம்விட்டு, 'அரைவாசிப் பேருக்குக்கிட்ட போறாங்கள் போல கிடக்கு' என மனதுள் கணக்கிட்டேன்.

எனக்கும் 'லீவில்' போய் அம்மா, அப்பாவைப் பார்க்க ஆசையாய்தான் கிடக்கு. ஆனால் அலைகளெல்லாம் ஆமிபிடிச்சிருக்கிற இடத்துக்குள்ளேயெல்லோ இருக்கினம். கிட்டடிச் சொந்தக்காரர்கூட இஞ்ச இல்லையெண்டு அம்மா முந்திப்போட்ட கடிதத்தில் எழுதியிருந்தவா. இப்ப அம்மாவோட கடிதத்தொடர்பும் இல்லாமல் போச்சது. இப்ப சண்டை நடக்கிற பிரதேசத்தின்ர எல்லையில வன்னட ஊர் இருக்கிறதால வீட்டுக்காரர் எங்கேயாவது பாதுகாப்புத்தேடி இடம்பெயர்ந்திருப்பினம்... இவ்வாறு தொடர்ந்த எனது சிந்தனைப் போக்கு பொறுப்பாளரிடம் கதைத்துமிட்டுத் திரும்பியவர்களின் வருகையால் கலைந்தபோனது. அவர்களது கையில், விடுமுறைக்கான பதிவு அட்டையைப் முகத்தில் வருடக் களைக்காக் காணாத உறவுகளைச் சந்திக்கும் ஆவலையும் காணமுடிந்தது. நாளாவது பரவாயில்லை வேலை நிமித்தம் இருந்திட்டு எப்பவாவது வெளியில் போகமுடிகிறது. இவர்கள் பாவம், அதற்காக இவர்கள் வெளியில் போவதில்லை என்றில்லை. இவர்கள் சார்ந்த அணியின் நகர்வே இரவிலேதான் நடப்பதால் வழியில் எவரையுமே சந்தித்திருக்க வாய்ப்பில்லை. இப்பவாவது வீட்டுக்காரரைச் சந்தித்துமிட்டு வரட்டும், என்று என்னுள் நினைத்துக் கொண்டிருக்கையில் தூரத்தில் சந்திரன் வருவது தெரிந்தது.

சந்திரன் தனது இருகால்களையும் இழந்திருந்தாலும் செயற்கைக் கால்களின் உதவியுடன் நடப்பதில் ஓரளவு வெற்றியடைந்திருந்தான். உண்மை மனிதனின் மறுபிரதியாகவே அவன் எம்மிடையே உலாவிக்கொண்டிருக்கிறான். அவனைப் பார்த்தால் என்னைப்பார்க்கத் தேவையில்லை. அப்படியொரு உருவ ஒற்றுமை, சிந்தனைப் போக்கும் அப்படியே. அதனாலேயே எம்மால் உயிர் நண்பர்களாகவும் இணைய முடிந்தது. சமீபகாலமாக எம்மை எல்லோரும் 'குளோனிங்' என்றும் கூப்பிடத் தொடங்கியிருந்தனர்.

சந்திரன் என்னிடம் வருவது பிரிய பக்கத்தில் இன்னுமொரு கதிரையை இழுத்துப் போட்டுவிட்டு அவனுடன் கதைப்பதற்கு ஆயத்தமானேன். அவனும் 'லீவில்' போகப் போறான்.

'வா மச்சான் எப்பவரும் லீவு' என்ற எனது கேள்விக்கு 'நாளைக்கு' என்றவன், 'ஆனா நான் போகேல்ல' என முடித்தான்.

'ஏன்ராப்பா, வீட்டுக்காரர் இஞ்சதானே இருக்கினம்.... நீ வீட்டை விட்டு வெளிக்கிட்டும் எட்டு, ஒன்பது வருசமாச்சு.... அம்மா பாவமெடா. ஒருக்காப்போய் அருகளைப் பாத்திட்டுவாவன்' என்றேன் அறிவுரை சொல்லும் விதத்தில்.

'நான்தான் போகேல்லையே தவிர, சந்திரன் போறான்' என்ற அவனது பதிலில் குழம்பிப்போய் விழிகளிலேயே வினாவுடன் அவனை ஏறிட்டு நோக்கினேன்.

'என்ன மச்சான் ஒண்டுமா

இன்னும் சரியா விளங்கிக்கொள்ளல்ல என்டுதான் அர்த்தம்' என்றான் கடுப்புடன். என்னிடம் காரியம் சாதிப்பதற்கு அவன் கையாளும் பாணி இது. உடனேயே சரணடைந்தேன்.

'சரி மச்சான் நான் போறன், ஆனா... நீ சொல்லுற காரணம் சரியா இருந்தாலெடுத்' என்று சொல்லி சரணடைவதற்கும் நிபந்தனை போட்டேன்.

'தங்கச்சி வீச்சாவடைந்து இன்னும் ஒரு மாதம்கூட ஆகேல்ல. அந்த நேரம் சண்டையில நிண்டதால என்னாலையும் போகமுடியேல்ல. இப்ப இந்தக் கோலத்தோட போய் வீட்டுக்காருக்கு முன்னால நிண்டா எவ்வளவு கவலைப்படுங்கள்' என்று தன் தரப்பு நிலையை விளக்கி பொருத்தப்பட்டிருந்த இரு செயற்கைக் கால்களையும் காட்டினான், 'இப்ப நீ போனபெண்டா, நான்தான் வந்திருக்கிறதா நினைச்ச ஆறுதல் படுவினம். பிறகு கொஞ்சக்காலம் கழிச்ச உண்மை தெரியவந்தால் சமாளிச்சுக் கொள்ளுவினம்' என்றான்.

'எல்லாம் சரியடா... ஆனா... வீட்டுக்காரர் என்னை நீயில்லையெண்டு அடையாளம் பிடிச்சா?.... மற்றவை பரவாயில்லை அம்மா எப்படியும் அடையாளம் பிடிப்பா' என்றேன் சற்று நழுவலாக.

'அதெல்லாம் பிரச்சினையில்லை. நான் சின்ன வயதில இயக்கத்துக்கு வந்தனான். வீட்டை விட்டு வந்ததிலிருந்து இண்டைவரைக்கும் வீட்டை போகேல்ல.... இந்த இடைக்குள்ள என்னில எத்தினையோ மாறுதல்கள் நடந்திருக்கும். ஒருத்தரும் அடையாளம் பிடிக்காமினம். நீ போட்டுவா' என்றவனின் முகத்திலே எனது விழிகளை எறிந்தவாறு, நானைக்கு நான் போறன். ஆனா ஒரு கிழமைக்கு நிக்கமாட்டன். அடுத்தநாள் அல்லது மறுநாளுக்கிழமை திரும்பியிடுவன்' என்ற எனது பதிலுக்கு அவனது மறுப்பிற்கிடமில்லாமல் திடமாகவே கூறினேன்.

எனது பதிலை ஏற்கும்வகையில் தலையை அசைத்தபடி ஊன்றுகோல்களைக் கையில் எடுத்துக்கொண்டே, 'ஒரு விசயம் மச்சான்... வீட்டுக்காரர் எல்லோரையும் ஒருக்காப் பாத்து, அம்மாவின்ர மடியிலிருந்து, அவவின்ரகையால் சாப்பாடு சாப்பிட எனக்கும் சரியான விருப்பமாகதான் கிடக்கு... ஆனால்... விடு இருக்கிற நிலைமையில, நானும் ரெண்டுகாலும் இல்லாம அதுகளுக்கு முன்னாலபோய் அதுகள இன்னும் வருத்தப்பட வைக்கக் கூடாதெண்டுதான் உன்னை அனுப்பிறன்' என்ற சந்திரனின் கைகளை ஆதரவாகப் பிடித்துக்கொண்டேன்.

கண்களில் தயக்கமும், மனதில் பதற்றமுமாக அலைட்டின் முன் நின்றேன். சந்திரன் சொல்லியபடி எல்லா அடையாளங்களும் சரி, படலையில் கைவைத்தவாறு உள்ளே விழிகளால் ஊடுருவினேன். சந்திரன் சொன்னதுபோல் நடுத்தரக் குடும்பத்திற்குரிய வீடுதான். ஒருவாறு மனதைத் திடப்படுத்திக்கொண்டு படலையைத்திறந்தேன். சத்தம் கேட்டு வெளியில்வந்த சிறுமன் என்னைப் பார்த்துவிட்டு, 'அம்மா, ஆரோ ஒரு அண்ணா வாறார்' என்றான். அவனது காதுக்குப்புலனாக வெளியேவந்த சிறுமி, என்னை நன்றாக உற்றுப்பார்த்தாள். இருவரது முகங்களும் அவர்களை சந்தியின் தம்பி, தங்கை என அடையாளப்படுத்த, நான் இருவரையும் நோக்கி புன்னகைத்தேன். சிறுமியின் விழிகளில் திடீரென ஒரு பிரகாசம். 'அண்ணை...' என்று சந்தோசம் பீறிக் கத்தியபடி, 'அம்மா.... அண்ணா வந்திருக்கிறா' என்று கதியபடியே என்னிடம் ஓடிவந்தாள். பின்னால் முகத்தில் ஏகப்பட்ட மகிழ்ச்சியுடனும், தனது ஒருகாலையிழந்ததில் சிக்காத தடியுடனும் அம்மாவும் ஆவலுடனும் தம்பியும் ஓடிவந்தான். உள்ளே நுழைந்தேன். அக்குடும்பத்தின் இயல்பான பாசப்பிணைப்பில் திக்குமுக்காடிய எனக்கு, அவ்வீட்டின் மூத்தமகளாக வருவதைவிட முற்றிலும் இயல்பாக இயங்கக்கூடிய நான் சந்தர்ப்பத்தை நல்லதென்றால்...? அடிப்படையில் என்னால் இக்குடும்பத்திற்கு ஏதாவது செய்யமுடியும்... ஆம்... கட்டாயம் செய்யவேண்டும் என்னுள் தீர்க்கமாக முடிவெடுத்துக்கொண்டேன்.

மறுநாள் அவளிருள்ள ஒருவரின் உதவியுடன் உயிர்வேலைக்குச் சேர்த்து கொண்டேன். வீட்டில் எல்லோரும் தடுக்க முயற்சித்தனர்தான் என்றாலும், எவராலும் விடுமுறைக்குமேல் எடுக்க நாட்களுக்கும் உழைத்து வீட்டிற்கு உதவவது என எனது தீர்மானத்தை முதியடிக்க முடியாதபோது.

இன்று அ 'லீவு' முடிகிறது. எப்படியும் முகாமுக்கு நான் திரும்பவேண்டும். எனினும் சந்திரன் குடும்பத்தினரின் வருகைபற்றிய கேள்விக்குறிக்கு என்ன தீர்வு தருவது? எனைக் குழப்பிய இந்த விடயத்தை, சந்திரனிடம் நிலைமையைச் சொல்லி வீட்டிற்குச் சென்று அவர்களின் இயல்பு வாழ்க்கைக்கு வழிசெய்யும்படி வேண்டுவதுதான் பதிலாக என்னுள் முடிவெடுத்தது.

ஆனால், சந்திரன் மறுக்க இலகுவாக இச்சந்தர்ப்பமும் தூரமும் என்று விடுமானால் முடிவெடுத்தான். அப்படி மறுத்தாலும் கட்டாயம் வற்புறுத்துவது என்று உறுதிபண்ணிக்கொண்டே, ம. ஆனால் இவர்கள் மத்தியில் அவசரமாக, எதேர்தலாக உரையாடி நான் இன்று காப்பு இவர்களிடமிருந்து விடைபெறுவது என்ற சிந்தனையை மூளை முழுத்த மீண்டபடதிருந்த.

குளிக்கும் நேரங்களில் கொழும்பில் இருக்கும் உறவுகளை எடுத்துக்கொண்டிருக்கையில் மீண்டுமொருமுறை வந்து உறவாடிவிட்டுச் சந்திரனது பொருள் அடங்கிய உலாந்து சந்து திரும்பிநின்ற நான் வந்து தெரியாமல் அம்மாவும், அப்பாவும் கதைத்துக் கொண்டிருந்தனர். மெல்லமாக சற்றுக் காலம்பார்த்தேன்.

'என்னவாம் தம்பி எப்ப போறது' அப்பாதான் அம்மாவிடம் விளையாடி பிரிந்து 'இன்னுக்கு போறதென்டவன்' என்று கூறிய அம்மா மிக வருத்தத்துடன் இயக்கத்தில் சுமார்பட்டு வேலை செய்திட்டு வீட்டிற்கொழுந்த நாளைக்கு ஆறுதல் எடுப்பதென்று வந்தவளை எங்கட இந்தப் பாழாய்போன காலம் இருவரையும் வந்து அணைக்கு சுமார்பட்டு வைச்சிருந்து... என்ன செய்வம்' என்றார்.

தமிழீழ விடுதலைப்போர்கள் TamileelamArchive

முடிவுறாத தொடர் வதைகள்

மொறிஸ் தர்மபாலன்

நீண்டதொரு கால இடைவெளியின் பின் சிறிலங்கா அரசுக்கெதிராக நாடாளாவிய ரீதியில் மிகப்பிரமாண்டமான எதிர்ப்பலையொன்று எழுப்பப்பட்டிருக்கின்றது.

அண்மையில் கொழும்பு மருதானையில் பொலிஸ் சோதனைச் சாவடியொன்றில் வைத்து மலையகத் தமிழ்ப்பெண்ணொருவர் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டதைக் கண்டித்து, பல்கலைக்கழக சமூகம், ஆசிரியர், மாணவர் சமூகம், மற்றும் பொது அமைப்புக்கள், வர்த்தக சங்கங்கள், உட்பட சகலதரப்பினரும் தவிர்ந்த 11 தமிழ்க் கட்சிகள் ஒருங்கிணைந்து நடாத்திய இந்த மாபெரும் 'எதிர்ப்பு நாள்' நடவடிக்கை மிகவும் வெற்றிகரமாக நடாத்தி முடிக்கப்பட்டிருக்கின்றது.

06-07-2001 வெள்ளிக்கிழமை மாலை 3.30 மணிக்கென ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த எதிர்ப்பு நாள் நடவடிக்கை, தமிழ்ப் பெண்கள் மீதான பாலியல் வல்லுறவுகள் மற்றும் அனைத்து வகையான மனித உரிமை மீறல்களையும் கண்டித்து, அமைதிக்காக நியாயம் கேட்கும் வகையிலும், அரசின் இத்தகைய செயற்பாடுகளை வெளி உலகுக்கும் காட்டு முகமாகவும் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன.

கண்டன ஊர்வலங்கள், பொதுக்கூட்டங்கள், கதவடைப்பு, கடைமறிச் செல்லாமை, அமைதி வழிபாடு, பாடசாலைப் பகிஷ்கரிப்பு, கறுப்பு வெள்ளைக் கொடிகள் பறக்கவிடப்பட்டு என, பல்வேறு வகையிலும், பலதரப்பட்டவர்களாலும் நடாத்தப்பட்ட இந் நிகழ்வுகளால் அரசின் ஆளுகைக்குட்பட்ட, ஆக்கிரமிப்புக்குட்படுத்தப் கிடக்கின்ற தமிழர்கள் செறிந்துவாழும் அனைத்து நகரங்களும் முடக்க நிலைக்குத் தள்ளப்பட்டன.

பல்கலைக்கழகங்கள், பாடசாலைகள், நீதிமன்றம், வங்கிகள், அலுவலகங்கள் என அனைத்தும் வெறிச்சோடிக் காணப்பட்டன. வாகனப் போக்குவரத்துக்களும் ஸ்தம்பித நிலையில் இருந்தன.

பல்வேறு எதிர்ப்புக்கள், அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் எதிர்பார்த்ததைவிட அதிகளவிலான மக்கள் ஒன்றுதிரண்டு தமது உணர்வுகளை வெளிக்காட்டியிருப்பதானது, அரசின் மீதும் அதன் படைகளின் மீதும் மக்கள் எந்த அளவுக்கு கோபத்துடனும், வெறுப்புணர்வுடனும் இருக்கின்றார்கள் என்பதைக் காட்டுவதாகவே அமைகின்றது. அதுமட்டுமன்றி, அரச பயங்கரவாதத்தின் வெறியாட்டங்களைப் பார்த்து, மனதுக்குள் குமுறிக்கொண்டிருந்த மக்களுக்கு, இந்த எதிர்ப்பு நாள் ஓர் வடிகாலாகவும் அமைந்திருக்கின்றது எனலாம்.

தமிழ்ப்பெண்கள் மீதான படையினரின் பாலியல் வல்லுறவுகளும் தமிழர்மீதான மனித உரிமை மீறல்களும் சிறிலங்காவில் ஒன்றும் புதிதான விடயமல்ல என்பது எல்லோரும் அறிந்ததே.

ஆனால் அண்மைக் காலங்களாக படையினரால் கைதுசெய்யப்படுகின்ற தமிழ் பெண்கள், அதிகளவிலான பாலியல் வல்லுறவுகளுக்கு உள்ளாக்கப்பட்டு வருகின்றனர். இதற்கு உதாரணங்களாகப் பலவற்றைச் சொல்லிக் கொண்டே போகலாம்.

அண்மையில்கூட மன்னாரில் கடற் படையினரால் சந்தேகத்தின் பெயரில் கைது செய்யப்பட்ட இரு தமிழ்ப்பெண்கள், பம்பலப்பிட்டி பொலிசாரினால் விசாரணைக்கென அழைத்துச் செல்லப்பட்ட இரு தமிழ்ப்பெண்கள் என அடுக்கிக்கொண்டே போகலாம். இந்தவகையில் தற்போது மலையகத் தமிழ்ப்பெண்ணொருவரைச் சோதனை செய்வதாக்கூறி, மருதானை சோதனைச் சாவடியொன்றில் வைத்து பாலியல் வதைக்குட்படுத்தியிருக்கின்றது. இந்த வகையில் சிங்களப் படைகளின் தமிழ்ப்பெண்கள் மீதான வக்கிரம் விரிந்துசெல்கிறது.

தமிழ் மக்கள் மீதான மனித உரிமை மீறல்கள் எனப் பார்க்கின்றபோது, மிக அண்மையில் அம்பலமாகியிருக்கும் ஒரே பொரு சம்பவம் மட்டுமே உதாரணத்துக்குப் போதுமானதாக இருக்கின்றது. கடந்த 14-09-2000 அன்று அம்பாறை நாகதாத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு 52 நாட்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்த பெரியநீலாவணை நாராயணர் வீதியைச் சேர்ந்த மதுரைராசா போகராசா என்பவரை, கால், கண்கள் கட்டப்பட்ட நிலையில் கொண்டுசென்று மூங்கில் பொல்லுகளால் தாக்கி, சப்பாத்தில் உள்ள சாணியை நாக்கினால் நக்கவிட்டும், தமது எச்சிலை அவரது வாயில் துப்பி விழுங்கச் செய்தும், இன்னொருவர் எடுக்கும் சத்தியை வாயினால் நக்கிச் சுத்தம் செய்யும்படியும் கூறித் சித்திரவதை செய்துள்ளனர். இதனை அவரே மனித உரிமை ஆணைக்குழுவினரிடம் தெரிவித்திருக்கின்றார்.

இவ்வாறு அரச படைகளின் தமிழர் மீதான அடாவடிகள் தற்போது புதிய முனைப் புகளோடு பூதாகரமாகி வருகின்றன. இதற்கெல்லாம் காரணம் சந்திரிகா அரசதனது படைகளுக்குக் கொடுத்துள்ள சுதந்திரம் மட்டுமன்றித் தட்டிக்கொடுப்புக்களுமே. குற்றம்புரியும் படையினரை உரிய முறையில் தண்டிக்காது, அவர்களுக்கு இடமாற்றம் கொடுத்து முடித்தால் பதவி உயர்வும் கொடுத்து ஊக்குவிக்கின்ற நிலையே காணப்படுகின்றது.

இந்த நிதர்சனத்தைக் கண்டுணர்ந்த மக்களாலேயே இப்போது இத்தகைய அரசுக்கெதிரான எதிர்ப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மக்களின் இத்தகைய எழுச்சி தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தில் ஓர் புதிய பரிமாணமாய் எழுந்துள்ளது எனப் பலராலும் கருதப்படுகின்றது.

மக்களின் இத்தகைய எழுச்சியைப் பார்த்துக்கொண்டு, அரசும் அதன் படைகளும் கம்மா இருந்துவிடவில்லை. யாழ்ப்பாணத்தில் மட்டுமன்றி நாடளாவிய ரீதியில் இந்த எதிர்ப்பு நாளை ஏற்பாடு செய்து, ஆதரவு தேடிக்கொண்டிருந்த 11 தமிழ்க் கட்சிகளின் முக்கியஸ்தர்களை அழைத்த 51வது டிவிசன் படையணியின் அதிகாரிகள், ஹர்த்தாலை நிறுத்தும்படியும், மீறி எதிர்ப்பு நாள் நடவடிக்கையில் சபோட்டால் தாம் முக்கிய நகரப்பகுதிகளில் ஒன்பெருக்கி வாகனத்தில் திரிந்து பூட்டிய கடைகளைத் திறக்கும்படியும், திறக்கத் தவறினால் கடுமையான தண்டனை வழங்கப்படும் என்றும் மிரட்டும் தொனியில் படையினர் எச்சரித்தும், மாபும் அதைக் காதில் வாங்கிக் கொள்ளாதது படையினருக்கு பெரும் விப்பையும், சினத்தையும் ஏற்படுத்தின. அது இதேபோன்று, வவுனியா, மன்னார்ப் பகுதிகளிலும் கடைகளைப் பூட்டோ, ஹர்த்தாலை அனுஷ்டிக்கவோ கூடாதெனப் படையினர் காட்டமாகக் கூறியும், தமிழ், முஸ்லீம் வர்த்தக நிலையங்கள் மாவும் பூட்டப்பட்டிருந்தன. இதேநிலையே மட்டக்களப்பு, திருகோணமலைப் பகுதிகளிலும் நிலவியது. கொழும்பிலும்கூட ஆயிரக் கணக்காக மக்கள் அணிதிரண்டு எதிர்ப்பு நாளினை அனுஷ்டித்தார்கள். கொழும்பு முக்கோட்டைப் பகுதி, பிட்டன சதுக்கம் என ஊர்வலங்களும், பொதுக்கூட்டங்களும் நடத்தப்பட்டன. இவைகளையெல்லாம் பார்த்துக் கொதிப்படைந்த படையினர் தமது அடாவடித்தனங்களில் இறங்கினர்.

மன்னாரில் மீன்பிடிக்கச் சென்ற மீனவர்களது இயந்திரங்களைக் கொடுக்கமறுத்து, கடலில் மீன்பிடிப்பதற்கான நேர அவகாசத்தையும் குறைத்தனர். புளொட் இயக்கமும் இந்த எதிர்ப்பு நடவடிக்கையில் கூட்டாகச் செயற்பட்டதால் வவுனியா முகாமில் உள்ள 3 புளொட் உறுப்பினர்கள் சமாளியாகத் தாக்கப்பட்டதாகவும், தமது முகாமைச் சுற்றிக் காவல் போட்ட படையினர், தம்மை வெளியே செல்ல அனுமதிக்கவில்லையென்றும், தமது ஆயுதங்களை பறிமுதல் செய்யப்போவதாக்கூறி மிரட்டியதாகவும் புளொட் இயக்கத்தினர் தெரிவித்திருக்கின்றர். இதேபோன்றே ஏலோ இயக்க உறுப்பினர்கள் இருவரும் தாக்கப்பட்டதாக அவ்வியக்கம் அறிவித்துள்ளது. இவ்வாறு பற்பல அடாவடிகளில் இறங்கியும் படையினரால் அரசுக்கெதிரான எதிர்ப்பு நாள் அனுஷ்டிப்பதைத் தடுத்துவிடவோ அன்றி முழங்கடித்துவிடவோ முடியவில்லை என்பதனை நடந்து முடிந்த நிகழ்வுகள் எடுத்துக் காட்டுகின்றன.

எது எப்படியோ ஒட்டுமொத்தத்தில்

21ஆம் நூற்றாண்டின் யுத்தகளம் எப்படி அமையும்?

இந்த நூற்றாண்டிலும் அதிசயிக்கத்தக்க புதுமைகள் பல நிறைந்த புரட்சிகரமான பங்களிப்பினை கணவித்துறை போரியலுக்கு மேலும், மேலும் வழங்கவுள்ளது. ஆதி மனிதன் கற்களினால் ஆன ஆயுதங்களைப் பாவித்து எதிரியிடமிருந்து தன்னைப் பாதுகாத்தான். மனிதகுலம் வளர்ச்சியடைய, தேவைகள் விரிவடைய யுத்தங்கள் தோன்றின. அன்று கத்தி, கட்டி, வாள் என்பவற்றுடன் ஆரம்பித்த யுத்தமானது இன்று ஏவுகணைகள், போர்க் கப்பல்கள், போர் விமானங்கள், வேவு விமானங்கள் என நவீன போர்க்கருவிகளுடன் பலமடங்கு விரிவடைந்துள்ளது.

இன்று வல்லரசுகள் (குறிப்பாக அமெரிக்கா) தமது தற்காப்பு மற்றும் வலித்து தாக்கும் தொழில்நுட்ப வளர்ச்சித் திட்டங்களை மூன்று பிரிவுகளாக வகைப்படுத்தி உள்ளன.

1. Intelligence, Surveillance and Reconnaissance (ISR) புலனாய்வு, கண்காணிப்பு, வேவு.
2. Command, Control, Communication and Computingsystems (C4) கட்டளை, கட்டுப்படுத்தல், தொடர்பாடல், கணிப்பீடல்.
3. Long-Range Precision Strike நீண்ட தூர துல்லியத் தாக்குதல்.

இம்மூன்று தொகுதிகளும் அந்நாட்டின் வலிமையை உறுதிசெய்யும் வகையில் ஒன்றில் மற்றையது தங்கியிருக்கும் வண்ணம் தனித்தனியே செயற்படுத்தப்படுகின்றன.

1. **ஐ.எஸ்.ஆர்:** இத்தொகுதியில் எதிரிபற்றிய புலனாய்வுத் தகவல்களைத் திரட்டுதல், வேவுபார்த்தல், எதிரிபற்றிய அளவீடுகளை மேற்கொள்ளல், கண்காணித்தல் என்பன அடங்கும். எதிரிபற்றிய அளவீடுகளை மேற்கொள்ளுதல் என்னும்போது இலக்கின் தூரம், திசை போன்றவற்றை அளத்தல், எதிரியிடமுள்ள ஆயுதபலத்தினை அளத்தல், எதிரியின் ஆட்பலத்தை அளத்தல், எதிரியின் மனவளிமையினை அளத்தல் எனப்பலவகைப்படும். இவற்றை மேற்கொள்வதற்கு உயர் தொழில் நுட்ப உணரிகள் (Sensors) பொருத்தப்பட்ட செய்மதிகள், விமானங்கள், ஆளில்லாத் தானியங்கி வேவு விமானங்கள், ரடார்கள், எதிரியின் இடங்களில் பொருத்தக்கூடிய உணரிகள், உளவாளிகள் பயன்படுத்தப்படலாம். உணரிகள் என்னும்போது அது ஒரு தொலை நோக்கியாகவோ அல்லது ஒரு கமராவாகவோ அல்லது ஒரு ஒலிவாங்கியாகவோ இருக்கலாம். ஐ.எஸ்.ஆர். தொகுதியே யுத்தகளம் பற்றிய ஒரு பூரணமான படத்தினைப் பெறுவதற்கு உதவுகின்றது.

2. **சி4:** Command, Control, Communication and Computingsystems என்னும் நான்கு சொற்களும் சி என்னும் எழுத்தில் ஆரம்பிப்பதால் சி4 என அழைக்கப்படுகின்றது. ஐ.எஸ்.ஆர். மூலம் தகவல்களைப் பெற்றுகளம் பற்றிய பூரணமான படத்தினைக் கணனிகள் மூலம் வரையும் செயற்பாடையும் இலக்குக்களைத் தாக்குவதற்கு வேண்டிய கணிப்பீடுகளையும், உணரிகளைக் கட்டுப்படுத்தும். (உதாரணமாக செய்மதிகளை வேண்டிய இடத்திற்குத் திருப்புதல், ஆளில்லா உளவு விமானங்களின் பறப்பினைக் கட்டுப்படுத்தல் போன்ற) செயற்பாட்டையும் மேற்கொள்வதோடு தகவல் தொடர்பினையும் மேற்கொள்கின்றது. தகவல் தொடர்பிற்கு செய்மதிகள் உயர் வலுத் தொலைத் தொடர்புச் சாதனங்கள், கணனி வலையமைப்பு என்பன பயன்படுத்தப்படுகின்றன. இது பொதுவாக தகவல் தொழில்நுட்பம் (Information Technology) என அழைக்கப்படும். போர்க்கப்பல்கள், போர் விமானங்கள், டாங்கிகள், ஏவுகணைகள் போன்றவற்றின் நகர்வுகள் தாக்குதலுக்கு வேண்டிய கட்டளைகள் வழங்கும் பணியும் சி4இன் உடையதே. இலக்குகள் இனம் காணப்பட்டு இலக்கின் தன்மைகளுக்கு ஏற்ப டாங்கிகள் மூலம் தாக்கப்பட வேண்டிய இலக்குகளை டாங்கிகளுக்கும், போர்விமானங்கள் மூலம் தாக்கப்படவேண்டிய இலக்குகளைப் போர் விமானங்களுக்கும், ஏவுகணைகள் மூலம் தாக்கப்பட வேண்டிய இலக்குக்களை ஏவுகணைகளுக்கும் எனப் பல்வேறு விதமான கட்டளைகளை வழங்கும் செயற்பாடும் சி4 மூலமே மேற்கொள்ளப்படும்.

3) **நீண்ட தூர துல்லிய தாக்குதல்:**

சி4 மூலம் வழங்கப்படும் கட்டளைகளுக்கு ஏற்ப நீண்ட தூரத்திலுள்ள இலக்குகளையும் மிகத்துல்லியமாகத் தாக்கி அழிக்கக்கூடிய ஆயுதங்களைக் கொண்ட தொகுதியே இதுவாகும். போர்க்கப்பல்கள், சண்டை விமானங்கள், ஏவுகணைகள் (முதலிய இத் தொகுதியில் அடங்கும். உதாரணமாக குறூஸ் ஏவுகணைகளை (Cruise missiles) எடுத்துக்கொண்டால் இவை பல நூற்றுக்கணக்கான மைல்களுக்கு அப்பாலுள்ள இலக்கினையும் மிகத் துல்லியமாகத் தாக்கி அழிக்கவல்லது. இது ஏவப்பட்டதும் பறப்பின்போது செய்மதி வலையமைப்பின் மூலம் அதன் பறப்பு வழிநடத்தப்பட்டு தாக்க வேண்டிய இலக்குவரை செய்மதிகள் மூலம் கட்டுப்படுத்தப்படும்.

இம்மூன்று தொகுதிகளின் பங்களிப்பினால் கணனி மயப்படுத்தப்பட்ட யுத்தம் வழிநடத்தப்படுகின்றது. இம் மூன்று தொகுதிகளையும் ஒருங்கிணைத்து தொகுதிகளின் தொகுதி (System of Systems) உருவாக்கப்படவுள்ளது. இத்தொகுதி உருவாக்கப்பட்டால் ஒரு கட்டளை அதிகாரி தன் கண்முன் இருக்கும் பிரமாண்டமான கணனிமயப்படுத்தப்பட்ட திரையில் சண்டைக் களத்தினையும் களம்பற்றிய தகவல்களையும், சண்டைக் காட்சிகளையும் காணமுடியும். கட்டுவீரரால் கட்டிக்காட்டி ஒரு பொத்தானை அழுத்தி எதிரியின் இலக்குக்களை நிர்மூலமாக்கலாம். எவ்வெவ் இலக்குகளை எப்படிப்பட்ட ஆயுதங்களால் தாக்கவேண்டும் என்பதனைக் கணனிகளே முடிவெடுத்து சண்டைகளை நடத்தி முடித்துவிடும். வருங்காலங்களில் நடைபெறும் விக்கக்கூடிய சமிக்ஞைகளைக் கொடுத்தல். ஏவுகணைகளை வழிநடத்தும் செய்மதிகளின் செயற்பாட்டைக் குழப்பி அல்லது மாற்றி அமைத்து ஏவுகணைகளைச் சரியான இடத்தில் தாக்கவிடாது செய்தல். ஜி.பி.எஸ். சிஸ்டங்களுக்கு போலிச் சமிக்ஞைகளை வழங்கி அவற்றின் செயற்பாட்டைக் குழப்புதல் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

சண்டைக்களத்திற்கு வெளியே தொலைத் தொடர்பு வலையமைப்பு (Telecom net work) விமானப்போக்குவரத்து வலையமைப்பு (Airtrafic Control System), இ-மெயில், இணை போன்ற கணனி வலையமைப்புக்கள் மூலம் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளைக் குழப்பி அமற்றைச் செயலிழக்கச் செய்தலும், சைபர் தாக்குதல் ஆகும். இவற்றினால் எதிரிநாட்டின் பொருளாதாரம், இயல்பு நிலை, மன வலிமை என்பவற்றைப் பாதிப்படையச் செய்யலாம்.

சண்டைக் களத்திலும்சரி அதற்கு வெளியிலும் சரி, சைபர் தாக்குதலை மேற்கொள்வதற்கு ஆயுதங்களோ, வெடிமருந்துகளோ, போர்வீரர்களோ தேவையில்லை. கத்தியின்றி, சத்தமின்றி, இரத்தமின்றி, மூளைத்திறனால் கணனி வைரஸ், மின்காந்த அலைகள் என்பவற்றின் மூலம் சைபர் தாக்குதல் மேற்கொள்ளப்படும்.

ஸ்பேஸ் பேஸ்டு தாக்குதல்:

தொலைத்தொடர்பு, வேவு ஏவுகணைகளைக் கட்டுப்படுத்துதல் என்பவற்றிற்கு செய்மதிகளே பெரிதும்

சைபர் தாக்குதல்:

சைபர் தாக்குதல் என்பது சண்டைக்களத்திலும், சண்டைக்களத்திற்கு வெளியிலும் மேற்கொள்ளப்படும் தாக்குதல் ஆகும்.

சண்டைக்களத்தில் தகவல் தொடர்பாடலில் ஒரு இடைவெளியை உருவாக்குதல் அல்லது தொடர்பாடலைத் தடுப்பதே சண்டைக்களத்தில் நடைபெறும் சைபர் தாக்குதல் ஆகும். இத்தாக்குதல் மூலம் ஐ.எஸ்.ஆர், சி என்பவற்றைச் செயலிழக்கச் செய்தல், அல்லது பிழையான தகவல்களை வழங்குதல். உதாரணமாக ஒரு வேவு விமானத்திற்குக் கொடுக்கப்படும் சமிக்ஞைகளைக் குழப்பி அதனைச் செயலிழக்கச் செய்தல் அல்லது ஒரு வேவு விமானம் கொடுக்கும் படங்களில் ஒரு போரியல் பகுதியின் கட்டுப்பாட்டு நிலையத்திற்குக் கொடுத்தல், ரடார் திரைகளில் போலி விம்பங்களைத் தோற்றுவித்தல் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

அணுவெளி:

1. Cyber space attack (சைபர் தாக்குதல்)
2. Outer space attack (அவுட்டர் தாக்குதல்)

அவுட்டர் தாக்குதல்:

அவுட்டர் தாக்குதல் என்பது சண்டைக்களத்திலும், சண்டைக்களத்திற்கு வெளியிலும் மேற்கொள்ளப்படும் தாக்குதல் ஆகும்.

சண்டைக்களத்தில் தகவல் தொடர்பாடலில் ஒரு இடைவெளியை உருவாக்குதல் அல்லது தொடர்பாடலைத் தடுப்பதே சண்டைக்களத்தில் நடைபெறும் சைபர் தாக்குதல் ஆகும். இத்தாக்குதல் மூலம் ஐ.எஸ்.ஆர், சி என்பவற்றைச் செயலிழக்கச் செய்தல், அல்லது பிழையான தகவல்களை வழங்குதல். உதாரணமாக ஒரு வேவு விமானத்திற்குக் கொடுக்கப்படும் சமிக்ஞைகளைக் குழப்பி அதனைச் செயலிழக்கச் செய்தல் அல்லது ஒரு வேவு விமானம் கொடுக்கும் படங்களில் ஒரு போரியல் பகுதியின் கட்டுப்பாட்டு நிலையத்திற்குக் கொடுத்தல், ரடார் திரைகளில் போலி விம்பங்களைத் தோற்றுவித்தல் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

அணுவெளி:

எதிரியின் செய்மதிகளைச் சுடுந்சிதைத்து, ஐ.எஸ்.ஆர், சி நீண்டதூர துல்லியத் தாக்குதல் தொகுதிகளின் செயற்பாடுகளைக் குழப்புதல் அல்லது தாக்குதல் என்பவற்றைக் குறிக்கும். செய்மதிகளை சுடுந்சிதைக்கக் கூடிய செய்மதி எதிர்ப்பு ஆயுதங்கள் (Anti-Satellite Weapons) இருநாடுகளையும் வருவோம். மேலே கதிர்கள் அல்லது ஏவு

அணுவெளி

ணைகள் செய்மதி எதிர்ப்பு ஆயுதங்களைப் பயன்படுத்தப்படவுள்ளன. இவை தரை விண்வெளியில் வெற்றித்தில் பதக்கக் கூடிய விமானங்களும் வருவோம். இவற்றின் மூலம் அண்டவெளியிலும், பூமியிலிருந்து கொண்டே, கணனியில் பொத்தான்களை அழுத்துவதன் மூலம் சண்டைகள் அரங்கேற உள்ளன. அண்டவெளிச் சண்டைகளில் வெடியோசைகள், பூமியிலுள்ளவர்களின் காதுகளில் விழப்போவதில்லை.

எதிர்காலச் சண்டைகளில் பங்குகொள்ளும் இராணுவ வீரர்கள் கல்வியறிவு கூடியவர்களாக இருத்தல்வேண்டும். கத்தில் சிறிய அளவு வீரர்களும் கணனிகளுக்கு முன் அதிக வீரர்களும் இருப்பர்.

அமைச்சர் ஹக்கீம் பதவி நீக்கம் தொங்கு நிலையில் பொ.ஐ.மு. அரசு!

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடன் நான் வெள்ளியன்று (15-06-2001) இரவு இரண்டரை மணித்தியாலங்கள் பேச்சு வார்த்தை நடத்தினேன். நாட்டை ஆள்வதற்குத் தார்மீக அதிகாரமில்லாத அரசாங்கம் ஒன்றில் அங்கம் வகிப்பதிலுள்ள குற்ற உணர்வை ஜனாதிபதியுடன் பகிர்ந்து கொள்ள விரும்பினேன். ஆனால் அதை ஏற்றுக்கொள்ள அவர் மறுத்துவிட்டார்' என சிறிலங்கா முஸ்லீம் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் 16.06.01 சனிக்கிழமை பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தபோதே அமைச்சர் ரவூப் ஹக்கீம் அரசாங்கத்தில் இருந்து வெளியேறும் நாள் வெகு தொலைவில் இல்லை என்பது தெளிவுபட்டுவிட்டது.

ஆனால், 20.06.01 புதன்கிழமை காலை அமைச்சரவையில் இருந்து ஹக்கீம் நீக்கப்பட்டதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் அறிவிப்பு வெளிவந்தமை பலருக்கும் ஆச்சரியம் அளிக்கும் ஒன்றாகவே இருந்தது. இவ்வாறு ஏற்பட்டமைக்கு ஹக்கீமின் பதவி விலகல் அறிவிப்பு எதிர்பார்க்கப்பட்டதாக இருக்கையில் ஜனாதிபதியின் பதவி நீக்க அறிவிப்பு வெளிவந்தமையே காரணமாகும்.

ரவூப் ஹக்கீமிற்கும், பொதுஜன ஐக்கிய முன்னணிக்கும் இடையிலான முரண்பாடுகள் ஏற்கனவே வெளிப்பட்டதொன்றாக இருப்பினும், இம்மாத ஆரம்பத்தில் இருந்து அது வெளிப்படையாகவே தெரியவும் தொடங்கியிருந்தது. கல்முனைக்குத் தனி மாவட்டம் கோரும் முஸ்லிம் காங்கிரசின் நிலைப்பாட்டைக் கடுமையாகச் சாடிய சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளரும், பொ.ஐ.மு. அரசாங்கத்தின் சிரேஷ்ட அமைச்சர்களில் ஒருவருமான எஸ்.பி. திசாநாயக்க 'மதத்திற்கும், குலத்திற்கும், இனத்திற்கும் எனத் தனித்தனி நிர்வாக மாவட்டங்களைக் கோரும் அடிப்படைவாதிகளைத் தூரத்தியடித்துவிட்டு, நாட்டின் மீது அன்பு கொண்டவர்களைக்கொண்ட தேசிய அரசொன்றை அமைக்கவேண்டும்' எனத் தெரிவித்ததோடு, 'சில சிறுபான்மை இன அரசியல் கட்சிகள் நாட்டின் தேசியத் தேவைகளைக் கணக்கில் எடுக்காது சுயநலமாகச் செயற்பட்டுக்கொண்டு அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுத்து வருகின்றன' எனவும் சாடினார். எஸ்.பி. திசாநாயக்கவின் இக் கூற்றுக்கள் முஸ்லீம் காங்கிரஸ் குறிப்பாக அதன் தலைமையான ரவூப் ஹக்கீமை குறிப்பாகக் கொண்டே கூறப்பட்டதாகும்.

ஆகையினால், ரவூப் ஹக்கீம் அரசை விட்டு வெளியேறுதல்/வெளியேற்றப்படுதல் என்பது ஏற்கனவே எதிர்பார்க்கப்பட்டதுமே ஆகும். ஆயினும், ஜனாதிபதி சந்திரிகாவிடம் இருந்து இவ்வாறானதொரு அறிவிப்பு எதிர்பார்க்கப்பட்டதொன்றாக இருக்கவில்லை. ஏனெனில், ஹக்கீம் தானாகவே வெளியேறுதல் என்பதே ஆளும் தரப்பிற்கு அனுகூலமானதாகும்.

இந்தவகையில் பார்க்கையில் ஹக்கீம் ஒரளவுக்கு வெற்றிகண்டுள்ளார் என்றே கொள்ளமுடியும். சந்திரிகா குமாரதுங்க வுக்கு இயன்றவரை வெறுப்பேற்றி தம்மை ஆளும்தரப்பில் இருந்து வெளியேற்றச் செய்துள்ளார் என்றே கொள்ளமுடிகின்றது.

கடந்த ஒக்டோபரில் பொ.ஐ.மு.முன்னணி அரசாங்கம் அமைக்க முயன்றபோதே ஹக்கீமின் போக்குகள் சந்திரிகா குமாரதுங்கவுக்கு திருப்தி அளிப்பதாக இருக்க வில்லை. ஒருபுறம் 100 நாட்கள் அவகாசத்துடன் அரசாங்கத்திற்கு ஆதரவு அளிப்பதான அவரின் அறிவிப்பும், பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தவுடன் நேரடியாக ஏற்பட்டிருந்த பகையால் எழுந்த அபிப்பிராய பேதங்களும், ஜனாதிபதிக்கு ஹக்கீம் மீது அதிருப்தியைக் கொடுப்பவையாக இருந்தது.

ரவூப் ஹக்கீம் அவ்வாறான முரண்பாடான நிலைப்பாட்டைக் கொண்டமைக்குப் பல காரணங்கள் இருந்தன. தேர்தலுக்கு முன்பான அவருக்கு வழங்கப்படுமென உறுதியளிக்கப்பட்ட கப்பல் போக்குவரத்து அமைச்சு அவருக்கு வழங்கப்படாமை முதற் காரணியாக அமைந்தது. ஏனைய அமைச்சுக்களையும் அவர் ஜனாதிபதியுடன் போராடியே பெற்றுக்கொண்டார்.

அடுத்த முக்கியமானதொரு காரணியாக ரவூப் ஹக்கீம் தயாரித்த புரிந்துணர்வு உடன்பாட்டையும் ஜனாதிபதி சந்திரிகா

நிராகரித்திருந்தார். இப்புரிந்துணர்வு உடன்பாடு ஐ.தே.கட்சியுடன் ஆளும்கட்சி ஓர் உடன்பாட்டைச் செய்து கொள்ளும் நோக்கில் அமைந்திருந்தது.

இவற்றைத் தொடர்ந்து மாவனெல்லையில் முஸ்லீம்களுக்கு எதிராக நடத்த வன்முறையானது ஜனாதிபதியுடனான ஹக்கீமின் உறவை வெகுவாகப் பாதிப்பதாக இருந்தது. மாவனெல்லைச் சம்பவத்தில் தொடர்புடையவர் என அமைச்சர் மகிபால ஹேரத் மீது ஹக்கீம் குற்றம் சாட்டியமையும், அவர்மீது ஐ.தே.க. கொண்டு வரவுள்ளதாக அறிவித்த நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு 'ஆதரவு' வாக்களிக்கப் போவதாக அறிவித்தமையும் முரண்பாட்டை மேலும் தீவிரமாக்கிச் சென்றது.

இதற்கும் அப்பால் உள்நாட்டுத் தேர்தலுக்கான ஒழுங்கமைப்பு தேர்தல் கமிட்டியில் இடம்பெறப் போவதில்லை என்ற தொடு, அதனை நிராகரித்தமையும் ஹக்கீம் மீதான வெறுப்பை சந்திரிகாவுக்கு மேலும் அதிகரிப்பதாக இருந்தது.

மேலும் கல்முனை மாவட்டம் தொடர்பான விவகாரத்தில் ஹக்கீம் சந்திரிகா குமாரதுங்கவுக்குப் பெரும் அழுத்தம் கொடுத்தமையும் ஜனாதிபதி வாக்குமாறுவதாகக் குற்றம்சாட்டியமையும் எதிர்க்கட்சி கொண்டுவரவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையை தமது பேரம் பேசலுக்கான சந்தர்ப்பமாகப் பயன்படுத்திக்கொள்ள முயன்றமையும் சந்திரிகாவுக்கு கடும் சீற்றத்தைக் கொடுப்பதாகவும் இருந்தது.

இதற்கும் அப்பால் பொ.ஐ.முன்னணியையும் சந்திரிகா குமாரதுங்காவையும் பகிரங்கமாக விமர்சிக்கவும், பொ.ஐ.முன்னணி அரசாங்கம் ஆட்சியிய தார்மீக பலம் அற்றதென ஹக்கீம் குற்றம்சாட்டத் தொடங்கியமையும் சந்திரிகா குமாரதுங்காவின் ஆட்சியைப் பணயம் வைத்து ஹக்கீமை வெளியேற்றும் நிலைக்குக் கொண்டுவந்தது.

இதேசமயம், ஜனாதிபதி சந்திரிகாவுக்கு வேறுசில எதிர்பார்க்கையும் இருந்தது. அதாவது ஹக்கீமிற்கு எதிரான தனது நடவடிக்கைக்கு முஸ்லீம் காங்கிரசில் இருந்து முழு அளவில் எதிர்ப்பு வரப்போவதில்லை என்ற நம்பிக்கையும் இருந்தது. அதாவது முஸ்லீம் காங்கிரஸ் தலைமைத்துவத் நிற்கான போட்டி தீவிரமாக இருந்தமை காரணமாக ஹக்கீமின் வெளியேறுதலை ஒரு தரப்பினர் வரவேற்கக்கூடும் எனவும் அவர் நம்பிக்கை கொண்டிருந்தார்.

அதற்கு ஏற்றவித்தில் அவர் அமைச்சர் பேரில் அம்பாப்புள் நெருக்கமான உறவைக் கொண்டிருந்ததோடு, அவரை வழி நடத்தும் விதத்தில் ஆலோசனைகளையும் வழங்கிவந்தார். அதனை பேரில் அம்பாப்பும் ஏற்றுச் செயற்படுபவராகவே இருந்தார்.

இதனை ரவூப் ஹக்கீமும் புரிந்து கொண்டே இருந்தார். இதன் காரணமாக தமது நிலை பலவீனம் அடையக்கூடும் என்ற அச்சமும் ஹக்கீமிற்கு ஏளவு இருக்கத்தான் செய்தது. இதுவே பொ.ஐ.முன்னணியுடன் தனது முரண்பாட்டை வெளிப் படுத்தி வந்தபோதும், அவர் அரசாங்கத்தைவிட்டு வெளியேறாமைக்குக் காரண மாகவும் இருந்தது.

ஆகையால் அரசுக்கு எதிரான பிரச்சாரத்தைத் தீவிரமாக்கியது போன்று வெளியேறுவதில் அவர் தீவிரமாக இருக்கவில்லை. இதற்கு பேரில் அம்பாப் தலைமையில் தேசிய ஐக்கிய முன்னணி இருந்

தமையே காரணமாகும். அதாவது முஸ்லிம் காங்கிரசின் தலைமைத்துவத்துக்கான போட்டியில் இவ் இருவர் இடையேயும் பிரச்சினைகள் தீவிரமாகி இருந்தன. இதனால் தனது வெளியேற்றமானது அனைத்து முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவுடன் இடம்பெறுவதற்காக இருக்கும் என்பதில் அவருக்குச் சந்தேகம் இருக்கவே செய்தது. இதன் காரணமாகவே ஹக்கீம் தனது வெளியேற்றத்தை நாம் தப்பபிராயத்தில் வைத்திருக்க வேண்டும்.

ஆனால், ஹக்கீம் கொடுத்த அழுத்தங்கள், அவர் மக்கள் தொடர்பு கூட்டங்களில் வெளியிட்ட அபிப்பிராயங்கள் ஜனாதிபதி சந்திரிகாவின் பொறுமையை எல்லை மீற வைத்தது என்றே கூறலாம். இதன் வெளிப்பாடே எதுவித முன்னறிவிப்பும் இன்றி ஹக்கீமை வெளியேற்றும் முடிவை அவர் எடுத்திருத்தல் வேண்டும்.

இதேவேளை ஹக்கீமை வெளியேற்றுதல் பொ.ஐ.முன்னணி அரசாங்கத்திற்கு பாதகமான விளைவுகளை ஏற்படுத்தக் கூடும் என்ற எதிர்பார்க்கை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு இல்லாது இருக்க நியாயம் எதுவும் இல்லை. அதிலும் குறிப்பாக பிரதான எதிர்க்கட்சியாகத, நம்பிக்கை யில்லாத் தீர்மானம் ஒன்று கொண்டு வர எத்தனிக்கும் வேளையில் இவ்வாறான நடவடிக்கையில் இறங்குவது ஆட்சியையே பணயம் வைப்பதற்கு ஒப்பானதாகும் என்பது நன்கே புரிந்திருக்கும்.

ஏனெனில் முஸ்லிம் காங்கிரசின் வெளியேற்றத்துடன் பொ.ஐ.முன்னணி அரசாங்கம் நிச்சயமாக சிறுான்மை அரசாங்கம் என்ற நிலையை அடைந்துவிடும். அதாவது, பாராளுமன்றத்தில் அறுதிப் பெரும்பான்மைக்குத் தேவையான 113 ஆசனங்கள் அதனிடம் இருக்கவாய்ப்பில்லை.

முஸ்லிம் காங்கிரஸ் வெளியேற்றத்தின் முன்னர் பாராளுமன்றத்தில் 116 ஆசனங்களை மட்டுமே ஆளும்கட்சி கொண்டிருந்தது. தற்பொழுது அதன் நிலை 105 ஆகவோ அன்றி 109 ஆகவோ மட்டுமே இருக்கமுடியும். அதாவது முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் தேசிய ஐக்கிய முன்னணி என்பன இணைந்தே வெளியேறி இருப்பின், 11 ஆசனங்கள் குறைவடையும். அவ்வாறு இல்லாது அவற்றிற்கும் பிளவினை ஏற்படுத்தி, பெரியல் அம்பாப் தலைமையிலான நாலவர் அரசை ஆதரிக்கும் பட்சத்தில் 109 ஆசனங்கள் மட்டுமே ஆளும் கட்சிக்கு இருப்பதான வாய்ப்பு உண்டு.

ஆனால், தற்பொழுது வெளியாகும் தகவல்களின்படி முஸ்லீம் காங்கிரஸ் மற்றும் தேசிய ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களில் பெரியல் அம்பாப் உட்பட நான்கு பேர் ஆளும் பொ.ஐ.முவில் தொடர்ந்தும் அங்கம் வகிப்பதாகக் கருகின்றன. அவ்வாறானின் சந்திரிகா குமாரதுங்க தனது ஆட்சி அதிகாரத்தைப் பணயம் வைத்து முஸ்லீம் காங்கிரசைப் பிளவுபடுத்துவதில் வெற்றி பெற்றுள்ளார் போன்றே தெரிகின்றது.

இது ஒருவகையில் சந்திரிகா குமாரதுங்க அரசாங்கத்திற்கு பாதுகாப்பு அளிக்கும் முன்றாவும் அமைபக்கூடும். அதாவது ஜே.வி.பியினர் ஐ.தே.க. கொண்டுவரும் நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு ஆதரவளிக்காத பட்சத்தில் நம்பிக்கையில்லாப் பிரேரணை பெற்றிபெறுவதற்கான வாய்ப்பு இது இல்லாது செய்வதற்கு வாய்ப்புக்கள் அதிகமாகவே இருக்கும்.

அதாவது ஆளும்கட்சி சிறுான்மையானதாக இருப்பினும் ஐ.தே.க.விற்கு ஆதரவாக 103 வாக்குகளுமே கிடைப்பதற்கான வாய்ப்பு உண்டு. சில உறுப்பினர் முதலாக எதுவராகுக் சேர்ந்தும், பெரும்பாலும் ஆளும் கட்சியே சேரலாம், பாதிப்பு எதையும் விளைவித்துவிடாது.

இந்நிலையில், ஹக்கீமின் வெளியேற்றமானது சந்திரிகா குமாரதுங்க அரசை சிறுான்மை அரசாக்கியுள்ளது என்பதைத் தன் மாறும் எதையும் ஏற்படுத்திவிடாது என்பதைத் தற்பொழுது உறுதியாகக் கூறமுடியாது ஆயினும் பொ.ஐ.மு அரசாங்கம் நிலைத்திருக்க எதிர்பாக்கப்படும் உள்ள ஒருசிலவிலேன உதவி வழங்கலாகிலும்

தொடரும்

நிலைத்திருக்க வேண்டும். ஆகையினால் பொ.ஐ.முன்னணி அரசாங்கம், சிறுான்மை இனக்கட்சி ஒன்றின் தேவைகளுக்காக அரசாங்கம் கவிழக்கூடியதை நாம் விரும்பவில்லை' என்ற ஜே.வி.பியின் நிலைப்பாட்டை நம்பியே தனது ஆட்சி அதிகாரத்தை தொடர்வது பற்றிச் சிந்திக்கமுடியும். ஆகையினால் ஐ.தே.கட்சி பாராளுமன்றத்தில் கேற்று சமர்ப்பித்த அரசாங்கம் மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணை மட்டும் தான் அரசிற்கு கண்டம் என்பதல்ல. அரசாங்கம் தனது ஒவ்வொரு நடவடிக்கையின்போதும் ஒவ்வொரு கண்டத்தைத் தாண்டியே வரவேண்டி இருக்கும். ●

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

கிடைக்கப் பெற்ற மாவீரர்களின் பெயர்கள்

04-07-01 அன்று முல்லைத்தீவு மாவட்டத்தில் தவறுதலான வெடிவிபத்தில் வீரச்சாவடைந்த போராளி.

விரவேங்கை செந்தாளன்
கந்தையா-சுதர்சன்
யாழ்ப்பாணம்,
த.மு: அங்கையற்கண்ணி குடியிருப்பு
தேராவில், முல்லைத்தீவு.

இதே சம்பவத்தில் விழுப்புண்ணடைந்திருந்த போராளியொருவர் வீரச்சாவடைந்துள்ளார்.

மேஜர் புட்சி
தியாகமணி பாலபிரகாஸ்,
திருமலை.
த.முகவரி: மதுசா குடியிருப்பு,
தேராவில் விகவமடு,
முல்லைத்தீவு.

இதே தினம் மன்னார் கறுக்காய்க்குளம் சந்திப்பகுதியில் சிறீலங்கா இராணுவத்துடனான எதிர்பாராத மோதலில் மூன்று எல்லைப்படை வீரர்கள் வீரச்சாவடைந்துள்ளனர்.

விரவேங்கை ராயு
சின்னத்தம்பி கனகசுந்தரம்
யாழ்ப்பாணம்.
த.மு: தென்னிந்திய திருச்சபை வீதி,
ஆனையிறுத்தான்.

விரவேங்கை நடராசா உதயராஜ்
இல: 140, விகவமடு மேற்கு,
விகவமடு.

விரவேங்கை சுதாகரன்,
விஜயசுந்தரம் சுதாகரன்,
யாழ்ப்பாணம்,
த.மு: 4ஆம் யூனிற், மல்லாவி.

04-06-01 அன்று அம்பாறை கஞ்சிக்குடிச்சாறு பகுதியில் இராணுவத்துடனான எதிர்பாராத மோதலில் வீரச்சாவடைந்த போராளிகள்

லெப். மணிமுகன்
தம்பிமுத்து ஜெகநாதன்,
மட்டக்களப்பு.

04-06-01 கிளாலிப் பகுதியில் தவறுதலான வெடிவிபத்தில் போராளியொருவர் வீரச்சாவடைத்துள்ளார்.

விரவேங்கை அரிவிழி
சத்தியநாதன் வண்மதி,
வாடியடி, பூநகரி, மன்னார்.
த.மு: இல:73, தெனியங்குளம்,
துணுக்காய், மல்லாவி.

03-06-01 மட்டக்களப்பு மாவட்டம் பாலையடி வெட்டை எனும் இடத்தில் இராணுவத்துடனான மோதலில் போராளியொருவர் வீரச்சாவடைத்துள்ளார்.

2ஆம் லெப். காந்தவன்
பரமலிங்கம் மகாலிங்கம்,
மட்டக்களப்பு.

வெடிவைத்தகல் பகுதியில் சிறீலங்கா இராணுவத்துடன் ஏற்பட்ட மோதலில் விழுப்புண்ணடைந்த போராளியொருவர் 10-07-01 அன்று வீரச்சாவடைத்துள்ளார்.

விரவேங்கை வெற்றிமாறன்
வைரமுத்து ஆனந்தன்,
மன்னார்.
த.மு: ஆமிர் வீட்டுத்திட்டம்,
முழங்காவில்.

தானே நம்பமுடியாப் பொய்களை மக்களை நம்பச் சொல்லும் சிங்களம்

சிங்கள அரசும் இராணுவமும் எத்தகைய படுபாதகமான பொய்யைச் சொன்னாலும், செய்தி ஊடகங்கள் அதனையே வெளிமிட வேண்டும் என்பது சிங்கள அரசினதும் இராணுவத்தினதும் நிலைப்பாடு. கொழும்பு ஊடகங்களுக்கு குறிப்பாக சிங்கள ஊடகங்களுக்கு, இது அவ்வளவாகப் பொருந்தாது. கொழும்பில் குறிப்பாக சிங்கள ஊடகவியலாளர்கள், அரசாங்கத்தினதும் அதன் ஆயுதப்படைகளினதும் நெருக்குதல்களை அவ்வளவாக எதிர்கொள்வதில்லை என்பதால், அவர்கள் சற்று சுயாதீனமாக செயல்பட வாய்ப்பிருக்கின்றது. ஆனால், தமிழ் ஊடக வியலாளர்களின் கதியோ அதோகதிதான். அரசாங்கத்தின் விருப்பிற்கு இயைந்து நடக்க மறுப்போர் ஆயுதத்தை எந்த வடிவிலும் எதிர்கொள்ளவேண்டியவர்களாகவே உள்ளனர்.

அதிலும் வடக்கு கிழக்கில் செயற்படும் ஊடகவியலாளர்களின் நிலையை சொல்லிப் புரியவைக்க வேண்டியதில்லை.

கடந்த சில தினங்களிற்கு முன், யாழ் உதயன் பத்திரிகைக்கு மிரட்டல் பாணியில், சிங்கள இராணுவ அதிகாரி ஒருவர் கடிதம் எழுதியிருந்தார். யாழ் இராணுவ தலைமையகத்தின் கட்டளையதிகாரிக்குப் பதிலாக, கப்டன் லியனகே என்பவர் ஒப்பமிட்டு அனுப்பப்பட்ட கடிதம், உதயன் பத்திரிகையின் எழுத்துச் சுதந்திரத்திற்கு மிரட்டல் விடும் பாணியில் அமைந்திருந்தது எழுத்துச் சுதந்திரத்திற்கு, கருத்துச் சுதந்திரத்திற்கு எதிரான மிரட்டல் என்பதனைவிட, உண்மையை எழுதுவதற்கெதிராக விடப்பட்ட எச்சரிக்கை என்றே அதனைக் குறிப்பிடமுடியும். தாம் சொல்லும் பொய்யையே எழுதவேண்டும் என்று வலியுறுத்தும் பாங்கில் கீழ்த்தரமான எச்சரிக்கைப் பாணியில் அக்கடிதம் அமைந்திருந்தது.

குடாநாட்டில் ஊடருவியிருக்கும் விடுதலைப் புலிகளுக்கு எதிராக, தாம் நடத்தி வரும் தாக்குதலில் விடுதலைப் புலிகள் தான் கொல்லப்படுகின்றனர் எனவும், அப்படிக் கொல்லப்படுபவர்கள் பயங்கரவாதிகள் எனவும் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ள இராணுவ அதிகாரி, இளைஞர் கடுக்கு கொலை என பத்திரிகைகளில் செய்திகள் வரக்கூடாது, பயங்கரவாதிகளே கடுக்கு கொல்லப்பட்டனர் என எழுதப்படவேண்டும் என அக்கடிதத்தில் மிரட்டல் விடுத்திருக்கின்றார்.

இளைஞன் கடுக்கொலை என பத்திரிகைகளில் செய்தி வெளிவருவதால், படையினர் மீது மக்களுக்கு தப்பான அபிப்பிராயம் வந்துவிடும் எனவும், கப்டன் லியனகே தனது கடிதத்தில் குறிப்பிட்டிருக்கின்றார்.

படையினர் மீது தப்பான அபிப்பிராயங்கள் ஏற்பட வாய்ப்பிருப்பதால், மோதலின் போது உயிரிழக்கும் நபர்கள் தொடர்பான சரியான தகவல்களைப் பெற்று தங்களது பத்திரிகை பிரசுரிக்கவேண்டும் எனவும் கப்டன் லியனகே தெரிவித்திருந்தார்.

உதயன் பத்திரிகைக்கு, இராணுவத் தரப்பால் இக்கடிதம் அனுப்பிவைக்கப்பட்ட இரண்டாம் நாள், தெல்லிப்பழையில், இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே ஒரு மோதல் இடம்பெற்றது. இதில் இராணுவச் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டதுடன், மேலும் இருவர் காயமடைந்திருந்தனர். இச்சம்பவத்தில், அப்பகுதியில் நின்றிருந்த துண்டாலை வசியான மயில்வாகனம் ஜெயக்குமார் என்பவரும் கொல்லப்பட்டிருந்தார். இவர் சிறீலங்கா சுதந்திரக்கட்சியின் உடுப்பிட்டித் தொகுதி அமைப்பாளர், முன்னர் கரவெட்டிப் பிரதேச சபையில் புளொட் சார்பில் உறுப்பினராக இருந்தவர்.

இம்மோதலில் இவர் கொல்லப்பட்டதை, சிறீலங்காப் பாதுகாப்பமைச்சகம், விடுதலைப் புலி உறுப்பினர் ஒருவர் கொல்லப்பட்டதாக வெளியிட்டது.

சிறீலங்கா சுதந்திரக்கட்சி உறுப்பினர் ஒருவர் கொல்லப்பட்டதை, பயங்கரவாதி ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கும் சிங்களப் பாதுகாப்பமைச்சகம், அதனையே பத்திரிகைகள் வெளியிட வேண்டுமென்றும் எதிர்பார்க்கின்றது.

தமிழீழ ஆவணங்கள்
Tamileelam Archive

யூலை 7ம் திகதி, மட்டக்களப்பு மாவட்டத்தில் வாகரைப் பிரதேசத்தில், கதிரவெளி கட்டுமுறிவுக்குளம் வீதியில் உழவு இயந்திரத்தில் சென்றுகொண்டிருந்த பொதுமக்கள் மீது சிங்களப்படையினர் நடத்திய கிளைமோர்த் தாக்குதலில், நான்கு பொது மக்கள் படுகாயமடைந்தனர். சிறீலங்கா பாதுகாப்பமைச்சகமோ, விடுதலைப் புலிகளின் உழவு இயந்திரம் தாக்கப்பட்டதாகவும் பல பயங்கரவாதிகள் படுகாயமடைந்தனர் எனவும் இதுதொடர்பாக வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்திருந்தது.

யூலை 7ம் திகதி தென்மராட்சியில், மீசாலை அல்லாரைப் பகுதியில், திருமணம் ஆகாமல் தன் முதிய தாயாருடன் வசித்துவந்த 42வயதுடைய பெண்மணி ஒருவர் சிங்களப் படையினரால் கூட்டாக பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார். இக்கொடுமையைத் தடுக்க முனைந்த வேலுமுடைய அவரது தாயார் சிங்கள இராணுவத்தின் துலக்கும் பிடியால் தாக்கப்பட்டுள்ளார். தமிழ்ப்பெண்கள் மீது சிங்களப்படையினர் மேற்கொள்ளும் பாலியல் வன்முறைகள், பாலியல் சித்திரவதைகளை கண்டித்தும் அவற்றிற்கு எதிராக கருவலான தடைகளை எற்படுத்தாது வன்முறையிலும், வடக்கு கிழக்கில் பூரண கதவடைப்பு கடையடைப்பு போராட்டம் நடத்தப்பட வேண்டுமென இக்கோரலை நிராகரித்துவருகின்றது இதனைவிட, மேலும் கொடுமையான விடயம் என்னவென்றால், இதனை சிங்கள பாதுகாப்பு அமைச்சகம் மறுத்திருப்பதில்லை. தமது படையினருக்கும் இதற்கும் சம்பந்தமில்லை எனத் தெரிவித்த சிறீலங்காவின் இராணுவப் பேச்சாளர் எனத் கருணாரத்தினா, இதற்கு விடுதலைப் புலிகளோ அல்லது அவர்களுக்காக அனுதாபதாளர்களோ இக்காரியத்தைப் புரிந்திருக்கலாம் எனக் கூறியிருப்பதுதான். சிங்களத்தின் இத்தகைமையை, அதனை செய்தி ஊடகங்களுக்கு தெரிவித்த எனத் கருணாரத்தினாவே நம்பமுடியாத

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

தியாகத்துள் நனைந்து...

கரிய இருளோடு
கந்தகப்பொடி சமந்து
கொடும்பனை அழித்து
தமிழ்மனங்களில் தங்கிவிட்டவரே!
இனவாதம் கக்கும், சிங்களத்தின்
இரும்புக் கோட்டைக்குள்
அகிம்சித்துவம்ச செய்துமையால்
அண்டமெல்லாம் அதிர்கின்றன
உங்கள் பெயர் அறிந்து!

கடலோரம் வெடிசமைத்தீர்
தெருவோரம் நடைபயின்றீர்

வாழ்வின் வசந்தங்களை
மனிதத்தின் உணர்வுகளை
மதித்து நின்றவரே!
மண்டியிடா எம்மண்ணை
மகிழ்வோடு நேசித்தவரே!
இன்று,
காற்றோடு கலந்துவிட்டீர்.

அதனால்,
எனைத்துழுவும் தென்றலும்
ஈழமே தாகமென்று
எடுத்துரைக்கின்றது.
பூக்கும் மலர்களும்
உங்களை நினைத்து
புன்னகைத்து விரிகின்றன.
கடலின் அலைகள்
உங்களின் உடல்களை
படங்களாய் வரைகின்றன.

கருக்கொள்ளும் துயிழ்ழத்தில்
உங்களின் கனவுகளோடு
உங்கள் தியாகங்களை
நினைத்தபடி
நடைபயில்கின்றோம் நாம்
நமது இலக்கு நோக்கி....

-சமர்வீரன்
(போராளி)

பிரித்தானியா வெம்பிளி அரீனாவில்
பொங்குதமிழ் எழுச்சிவீரா

09-07-2001

தமிழிழ மக்களின் தேசிய அபிலாசையை வெளிப்படுத்தும் பொங்குதமிழ் எழுச்சி நிகழ்ச்சி, பிரித்தானியாவில் மிகப்பிரமாண்டமான அளவில் நடை பெற்றுள்ளது. 09-07-2001 அன்று நடைபெற்ற இவ்வெழுச்சி நிகழ்வில் ஐயாயி ரக்கிற்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்துகொண்டனர். திரை எங்கும் இசை வெள்ளம் என்ற இசைக்கட்டும், தமிழர் கலை பண்பாட்டுக்கழகத்தால் வெளியி டப்பட்டது. பொங்குதமிழ் நிகழ்வில், பிரித்தானியப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. போல் பொட்டாங் அவர்கள் கலந்துகொண்டு உரையாற்றினர். தமிழ்நாடு மன்னர் புஸ்பவனம் தப்புசாமி குழுவினரின் பொங்குதமிழ்சையும் நிகழ்ச்சியில் இடம் பெற்றது.

வன்கூவரில் உறுதிப் பூக்கள் 2001

கனடா வன்கூவர் உலகத்தமிழர் இயக்க கலைபண்பாட்டுக் கழகத்தினரால் 'உறுதிப்பூக்கள் 2001' கலை நிகழ்ச்சி வெகு சிறப்பாக நடாத்தப்பட்டுள்ளது. 1991ஆம் ஆண்டு வெற்றிலைக்கேணி தரையிறங்கு சமரில் வீரச்சாவடைந்த மாவீரர் யூசி சிறீகந்தரம் அவர்களின் சகோதரனால் தமிழீழத் தேசியக்கொடி ஏற்றப்பட்டு நிகழ்வுகள் மாலை ஆரம்பித்து வைக்கப்பட்டன. இந் நிகழ்வில் உணர்வுபூர்வமான பல கலை நிகழ்வுகளும் இடம்பெற்றுள்ளன.

கனடா வன்கூவரில் நடைபெற்ற 'உறுதிப்பூக்கள் 2001'

வெம்பிளி அரீனாவில் நடைபெற்ற பொங்குதமிழ் எழுச்சி நிகழ்ச்சி